1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்கரவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு வைகாசி மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 19-ம் இலக்கம்




## அடைக்கலத் திருநாள்

கொழும்புத்துறைத் தாபனத்திலே கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாள் இம்மாதம் 22-ந்திகதியாகிய வருகிறஞாயிறுவாரம் வழமைபோலப் பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படும். திருநாளன்றுகாலை 6-30 மணிக்குத் திருநாள்பாடற்பூசை நிறைவேறும். சாயந்தரம் 4-30 மணிக்கு வேஸ்பர்பாடிமுடிந்ததும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தோடும் திருநாள்முடிபாகும். இலங்கையின் இரக்ஷாபிதாவாகிய அர்ச். சூசையப்பரின் திருஅடைக்கலத்திலே வருடந்தோறும் யாழ்ப்பாணமேற்றிராசன முழுவதும் நேர்ந்து ஒப்புக்கொடுக்கப்படுவது இப்பதியிலே இத்திருநாளின் போதேயாகும். ஆதலால், அம்மாதவ முனிவரின் பக்தர்கள் முந்தியவருடங்களிற்போல இம்முறையும் பெருந்திரளாகச் சமுகங்கொடுத்துத் தங்கள் மேலும், தங்கள்குடும்பங்கள்மேலும், தங்கள்செல்வ நாட்டின்மேலும் அவரதுதவருத அடைக்கலத்தையும், ஆசீர்வாதத்தையும் இரந்துகொள்வார்களாக!

## சத்திரசிகிச்சைக் கருவிகள்

காது, மூக்கு, கண்டநோய்களுக்குச் சத்திரசிகிச்சைசெய்ய உபயோகிக்கும் கருவிகளை யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரியிலிருந்து கண்டிஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கும்படியாக உத்தரவிடப்பட்ட செய்திபற்றிச் சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் பெரிதும் அதிருப்தி ஏற்படலாயிற்று. இந்தக்கருவிகளைக் கண்டிஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கும்படி வைத்திய-சுகாதாரதலைவர் செய்தஉத்தரவைச் சுகாதாரமந்திரியார் நிறுத்திவிட்டாரெனத் தெரியவருகிறது.

## எட்டாம்வகுப்புத் தேரிவுப்பரீட்சை

அடுத்த எட்டாம்வகுப்புத் தெரிவுப் பரீட்சைக்குச் செல்லவிருக்கும் 50,000 மாணவர்கள் அப்பரீட்சையில் அரங்கேறத்தக்கதாக இம்முறை அதிகமானமாக்குகள்பெற்று, அதிகந்தகுதி பெற்றிருக்கவேண்டும். சென்றபொதுத் தாரதரப் பத்திரப்பரீட்சை (ஜி. சி. ஈ.) யில் மிகப்பெருவாரியான மாணவர்கள் அரங்கேறத்தவறியதை முன்னிட்டுத்தான் இப்புதியகொள்கையை அனுட்டிக்கக் கல்விப்பகுதி தீர்மானித்திருக்கிறது. இம்முறைமாணவர்கள் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகியவற்றில் ஏதாவதொருபாடத்திலும்; கணிதம், பொதுஅறிவு ஆகிய பாடங்களிலும் தனித்தனி 30 மாக்குகளும், அத்தோடு அம்மூன்று பாடங்களிலும் மொத்தம் 100 மாக்குகளுக்குமேலும் பெற்றிருக்கவேண்டும். எல்லாப்பாடங்களிலும் திருப்திகாமான அளவில் அறிவுபெறத்தக்கதாகவே இந்தமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## சுகாதாரவார விழா

அடுத்துநிகழும் ஆனிமாதம் 6-ந் திகதிமுதல 12-ந் திகதிவரையிலே இலங்கைமுழுவதிலும் வழமைபோலச் சுகாதாரவிழா கொண்டாடப்படவிருக்கின்றது. இதுவிஷயமாய் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் அரசாங்க சுகாதாரபகுதியும், பாடசாலைகளும், கிராமஅபிவிர்த்திச் சங்கங்களும நடவடிக்கை எடுத்துவருகின்றன.

## புதிய சமாதானநீதவான்

மானிப்பாய்வாசரான முகாந்திரம் எஸ். கனகரத்தினம் அவர்கள் ஜே. பி. எனப்படும் சமாதானநீதவானக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் 35 வருடங்களுக்குமேல் அரசாங்கத்தில் சேவைசெய்து இளைப்பாறியவர். இவருக்கு 1948-ம்ஆண்டு முகாந்திரப்பட்டம் சன்மானிக்கப்படலாயிற்று.

## மோட்டர்கார் விபத்து

இலங்கைப்பிரபல மோட்டர்கார் ஓட்டப் பந்தயவீரரான 29 வயதுடைய திரு. ஆனந்தா அமரசிங்க என்பவர் சென்றசனிக்கிழமை அதிகாலை கறுவாத்தோட்டப் பொலிஸ் ஸ்றேஷனைநோக்கித் தமதுகாரைச் செலுத்திச்சென்றபோது அவர்சென்ற கார்வழுக்கி ஒருமரத்திற்போய் மோதுண்டு விபத்துக்குள்ளான காரணமாக காரின்ஆசனத்தில் உட்கார்ந்தபடியே அவர் உடல்நெரிந்துஇறந்துபோயினர். சென்றமாதம் மஹாகஸ்தோட்டையில் நடந்தமோட்டர்கார் பந்தயஓட்டத்தில் இவரேமுதலாம்ஆளாக வெற்றிபெற்றார்.

## இலங்கை விமானப்படை

றோயல் இலங்கை விமானப்படைக்கென்று சென்றவருடம் மூன்று 'பெலியல்' விமானங்கள் வரவழைக்கப்பட்டன. இவைகள்ஒவ்வொன்றும் மூன்றுலட்சம்ரூபா பெறுமதியுள்ளன. இவைகள்மூன்றுமே விபத்துக்குள்ளாகிப் பரிகாசமாயின. இந்தவிமானங்களாலும், ஏற்பட்டமறுசெலவுகளாலும், பிறவற்றாலும் கடந்த ஒருவருடகாலத்தில் றோயல் இலங்கை விமானப் படைக்கு ஏற்பட்டநஷ்டம் 15 லட்சம் ரூபாவாகும். என்றாலும் வேறுநான்கு 'பெலியல்' விமானங்களை அதுவாங்கியுள்ளது. இவற்றில்இரண்டு சென்ற வியாழக்கிழமை வந்துசேர்ந்துவிட்டது.

## பிரதமரின் வேண்டுகோள்

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் களனித்தொகுதியிலே சென்ற திங்கட்கிழமை ஓர்மத்தியகல்லூரியையும், ஓர்பிரசவ விடுதியையும் திறந்துவைத்துப் பேசியபோது: "சுதந்திரத்தைப்பெற இலங்கை எவ்வளவோகஷ்டப்படவேண்டியிருந்தது; இந்தச்சுதந்திரத்தை இழக்கநேரும் அபாயம் நம்மைஇப்போது சூழ்ந்திருக்கிறது; இந்தஆபத்திலிருந்து நமது சந்ததிகளைப் பாதுகாக்கவேண்டியது நம்முடைய கடமையாகும்; தவருன கொள்கைகளையும், வெறும் வாக்குறுதிகளையும்நம்பி இலங்கையைமீண்டும் அடிமைத்தனத்தில் மாட்டாதீர்கள்" என்று கூறினார்.

## அரிசி நிறுத்துவிற்கப்படுமா?

அரிசியை நிறுத்துவிற்க வேண்டுமென்று உணவு-கமத்தொழில் மந்திரியார் கூறிய யோசனையை நிதிமந்திரியார் அங்கீகரித்திருக்கின்றார். நிறுத்துவிற்கும் முறையை மேற்கொண்டால் ஒவ்வொரு மூடையையும் அவிழ்த்து, அரிசியைக்கொட்டித் திரும்பஅளப்பதில் ஏற்படும் நேரச்செலவும், பணச்செலவும், வேலைச்செலவும் குறையுமென்று எடுத்துக்காட்டப் படுகிறது.

## புதிய உபநீதியரசர்

அசைஸ் கம்மிஷனராயிருந்து சில தினங்களின்முன் சுப்பிறீங்கோட்டு உபநீதியரசர்களில் ஒருவராக நியமனஞ்செய்யப்பெற்ற திரு. எச். என். ஜி. பெர்னண்டோ அவர்கள் சென்ற திங்கட்கிழமைகாலை நீதியரசர் புள்ளே அவர்கள் முன்பாக விசுவாசப்பிரமாணஞ்செய்து தம்முடைய பதவியைக் கையேற்றிருக்கின்றார். இவர் கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரியிலும்; ஒக்ஸ்வோட்சர்வகலாசாலையிலும் கல்வி பயின்றவர். இவர் தந்தையாரான திரு. வி. எம். பெர்னண்டோ அவர்களும் சுப்பிறீங்கோட்டு நீதியரசராக விளங்கியிருந்தார்.

## ஆனையிறவில் கார்விபத்து

மட்டக்களப்பைச்சேர்ந்த கல்முனைப் பகுதியிலிருந்து சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டர்கார்ஒன்று ஆனையிறவிலே ஓர்மரத்தில் மோதியதால் பெருஞ்சேதமடைந்தது. அதன் சாரதியான 50 வயதுடைய எஸ். சீனித்தம்பி அல்லதுசாமியார் படுகாயமடைந்து அவ்விடத்திலேயே மரணமாயினர். இவரது விலாஎலும்புகள் முரிந்து தலையிலும் படுகாயங்கள் ஏற்பட்டன. அந்தக்காரில்வந்த ஏனைய மூவரிலும் இருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் பிந்த இறந்துபோயினரெனத் தெரியவருகிறது.

## பாக்குநீரிணைத்திட்டம்

இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையிலுள்ள பாக்குநீரிணையைப் பெரியகப்பல்கள் போகக்கூடியதாகத் தோண்டிஆழமாக்குவதற்கான திட்டம் ஒன்றை இந்தியஅரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது. பாக்குநீரிணை ஆழமாக்கப்பட்டால் இப்போதுபோல இந்துசமுத்திரத்திலிருந்து பெரியகப்பல்கள் இலங்கையைச் சுற்றிக்கொண்டு வங்காளக்குடாவுக்குச்செல்லவேண்டிய அவசியம் ஏற்படமாட்டாது. பாக்குநீரிணையை ஆழமாக்குகிறதானல் மூன்று அல்லது நாலுகோடிரூபா செலவேற்படுமென மதிப்பிடப்படுகிறது. அதுதோண்டி ஆழமாக்கப்படுமானல் அக்கப்பல்கள் இலங்கையைச் சுற்றிச்செய்யும் 250 மைல் பிரயாண தூரம் குறையுமென்றும், அதனல் கப்பல்போக்குவரத்துச் செலவும், பிரயாணநேரமும் குறையுமென்றும் கூறப்படுகிறது. பாக்குநீரிணை தற்போது பதினொருஅடி ஆழமுடையது. அதனல் சிறியகப்பல்கள் மாத்திரமே இதனூடாகச் செல்லுகின்றன.

## விடுமுறைநாள் மாற்றம்

முஸ்லீம்களின் றம்சான் முடிவின் மறுதினம் இவ்வருடம் வைகாசிமாதம் 23-ந் திகதியல்ல, 24-ந் திகதியே வருகின்றது. அதனுல் அடுத்துவரும் 23-ந் திகதி திங்கட்கிழமைக்குப்பதில் 24-ந் திகதி செவ்வாய்க்கிழமையே அரசாங்க விடுமுறைநாளும், வங்கிவிடுமுறைநாளுமெனப் பிரசித்தஞ்செய்யப்பட் டிருக்கிறது.

## தற்காலிக போக்குவரத்து மந்திரி

போக்குவரத்து மந்திரியாரான மேஜர்மொண்ரேகு ஜயவிக்கிரம அவர்கள் கனடாதேச மொண்றியல்நகரில் நிகழவிருக்கும் சர்வதேச விமானசேவை மகாநாட்டிற்குச் சமுகமளிக்கச் சென்றமையால் அவரிடமாகப் போக்குவரத்துமந்திரி காரியாலயப் பாராளுமன்ற காரியதரிசியான திரு. வி. குமாரசாமிஅவர்கள் தற்காலிக போக்குவரத்து மந்திரியாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

## அழுத்துநுவரை உபதேர்தல்

சனப்பிரதிநிதிகள் சபையிலே காலியாயிருக்கும் அழுத்துநுவரை ஸ்தானத்துக்குப் புதியபிரதிநிதிஒருவரைத் தெரிவுசெய்வதற்கான உபதேர்தல் இம்மாதம் 28-ந் திகதி சனிக்கிழமை நடந்தேறவிருக்கிறது. நான்குஅபேட்சகர்கள் போட்டியிடும் இந்தத்தேர்தலிலே அரசாங்ககட்சியாகிய ஐக்கிய தேசியகட்சியும், எதிர்க்கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியும், சமசமாஜ கட்சியும், கம்யூனிஸ்தகட்சியும் மும்முரமாக ஈடுபட்டு, முழுமூச்சாகப் பிரசாரம் நடத்திவருகின்றன. அழுத்துநுவரைத் தொகுதியில் அடங்கிய வாக்காளர்தொகை 17,678. இத்தொகை கடந்த தேர்தலின்போது இருந்ததிலும் 1,192 பேரால் அதிகரித்துள்ளது. இவர்களிலே கண்டிச்சிங்களவர் நூற்றுக்கு 69 விகிதமும், தமிழர்கள் 27 விகிதமும் இருக்கின்றார்கள். ஏனையோர் கீழ்நாட்டுச் சிங்களவரும், சோனகரும், மலாயருமே.

## யாழ்ப்பாண-மலையாளப் புகையிலை

அரசாங்க கூட்டுறவுப்பகுதியினதும், யாழ்ப்பாண-மலையாளப் புகையிலை விற்பனவுக் கூட்டுறவுச்சங்கத்தினதும் சார்பாக இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்றிருந்த தூதுக்கோஷ்டி நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாக, 1957-ம் ஆண்டின் இறுதிவரையிலே யாழ்ப்பாணப்புகையிலையை இந்தியாவில் இறக்குமதிசெய்வதை அனுமதிக்க இந்தியஅரசாங்கம் சம்மதித்துள்ளது. அதனுல் யாழ்ப்பாணத்திலே தற்போது அறுவடை செய்யப்பட்டுவரும் புகையிலையை இந்தியாவில் இறக்குமதிபண்ணலாம். இவ்வருடம் விளைந்திருக்கும் புகையிலையின்விலை பத்துலட்சம் ரூபாவரையிலென மதிப்பிடப்படுகிறது. ஆனுல், அங்கு இறக்குமதிசெய்ய அனுமதிக்கப்பட்டுள்ள 1,666 கண்டி யாழ்ப்பாணப்புகையிலை 1,118 கண்டிகளைமட்டும் இந்தியாவிலுள்ள யாழ்ப்பாண-மலையாளப் புகையிலை விற்பனவுக் கூட்டுறவுச்சங்கத்தின் ஏசன்றுகளால் இறக்குமதி செய்யப்படும். மீதிப்புகையிலை இந்தியாவிலே புகையிலை இறக்குமதி வியாபாரத்தில் புதிதாக ஈடுபடும்இந்தியருக்கென ஒதுக்கிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தாவின் சோகக்கதை

"இப்படி ஏன் பயந்துபயந்து விழிக்கிறாய் குணம்? யாருக்கு என்ன சொல்லவேண்டும்? உன் மனதை அழுத்திக்கொண்டிருக்கும் பாரந்தான் என்ன? என்னிடம் சொல்லக்கூடாதா? பத்துமாதம்சுமந்து பெற்றெடுத்த உன் தாயிடம் சொல்லக்கூடாத இரகசியம் என்ன இருக்க முடியும்? உன் அப்பாவும், தம்பியும், நானும் நீஇழைத்த பிழைகள்அனைத்தையும் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே மன்னித்து விட்டோமே!" என்றாள் அந்தநோயாளியின் தாய்.

"மரணவேதனையில் என்னால் ஒன்றுமே சொல்லமுடியவில்லை அம்மா! நான் ஓர்ஏழைக்குடும்பத்தை ஏமாற்றி விட்டேன்; ஐயோ! ஓர்இளம் பெண்ணை வஞ்சித்துவிட்டேன்; உங்கள்மருமகளும், பேரப்பிள்ளையும் ஓர் நாள் இங்குவருவார்கள்; அவர்களைக் காப்பாற்றுங்கள்; அதே நம்பிக்கையுடன். நான்மரிக்கிறேன்; அப்பா, அம்மா, தம்பி! உங்களுக்கு நான் தெரிந்தும், தெரியாமலும் புரிந்தகுற்றங்களை மன்னித்துக்கொள்ளுங்கள்" என்றான் குணம். வேதனையால்வாடித் தவித்த அவன்உயிர் பிரிந்தது.

தன்மகனின் மனைவியும், பிள்ளையும் வருவார்கள் வருவார்கள்என்று மூன்று மாதகாலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் அந்தநல்லதாய். ஊர், பேர்தெரியாத அவர்கள் வரவேயில்லை. ஒருவேளை தன்மகன் பிரக்ஞையற்ற நிலையில் ஏதாவது உளறியிருப்பானோ என்றுதானும் அவள்நினைத்தாள். சிறுவயதிலேயே முரடனும், பத்தாவதுபரீட்சையில் தவறியதால் அவமானம்தாங்கமாட்டாது தன் கழுத்துச் சங்கிலியைத் திருடிக்கொண்டு ஓடிவிட்டுப் பன்னிரு ஆண்டுசெழித்து ஊதாரியாய் வீடுதிரும்பியவனும் என்னதான் செய்திருக்கமாட்டான்என்று நினைக்குந்தோறும் அவள் துக்கம்தாளாது அழுதுவிடுவாள்.

மாலை மணிஐந்தாயிற்று. கொடிகாமஸ்ரேஷனிலே கொழும்புறெயின் வண்டி வந்துநின்றது. ஈசல்போல் மொய்த்துக்கொண்டிருந்த சனத்திரள் சிலவினாடிகளில் ஓடிமறைந்தது. அப்போது கல்லூரிஒன்றிலே தனது வேலையைமுடித்துக் காற்றுப்போன தனதுசைக்கிளைத் தள்ளிக்கொண்டு அவ்வழியேவந்தான் ஜெயம். அவனுக்குமுன்னே ஓர்பெண் தன்கைக்குழந்தையை ஓர்கையிலும், ஓர்பெரிய இரும்புப்பெட்டியை மற்றொருகையிலும் தூக்கிக்கொண்டு மெல்லமெல்ல நடந்துகொண்டிருந்தாள். பிள்ளையையும், பெட்டியையும் கைக்குக்கை மாற்றிக்கொண்டே நடந்தவள் கொஞ்சத்தூரம் சென்றதும் வீதியோரத்தில் பெட்டியை வைத்துவிட்டு, குழந்தையையும் அதன்மேல் கிடத்திவிட்டு, சேலைத்தலைப்பால் முகத்தைத் துடைத்துக்கொண்டு மேல்மூச்சுவாங்க அயர்ந்துநின்றாள். அதற்குள் அவளை நெருங்கிவிட்ட ஜெயம் பெட்டிமேல் கைகளையும், கால்களையும் ஆட்டிக்கொண்டு படுத்திருக்கும் அந்தக்குழந்தையைக் கூர்ந்துபார்த்தான். உடனே சிறியபுன்னகை அவன்முகத்தில் படர்ந்தது. "ஓர்போட்டரையாவது வைத்துக்கொள்ளக்கூடாதா? அதிகதூரம் போகவேண்டுமோ?" என்றான்ஜெயம்.

"என் அம்மா திக்கெற்றான் வாங்கிக்கொடுத்தாள்; மேற்செலவுக்கு ஒருசதமும் கொடுக்கவில்லை" என்றாள் அவள்.

"நீங்கள் எவ்வளவுதூரம் செல்ல வேண்டும்? ஒன்றும் விபரீதமாய் நினைத்துக்கொள்ளாவிடின் நான் இந்தப்பெட்டியைச் சைக்கிளில்வைத்துத் தள்ளிக்கொண்டுவருகிறேன்; நீங்கள் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு நடக்கலாம்; எவ்வளவுதூரமானாலும் வீடு கொடிகாமத்திற்குள் இருக்குமானல் விளக்குவைக்கமுன் போய்ச்சேர்ந்துவிடலாம்" என்றான் ஜெயம். அப்போது அவள் முன்னும்பின்னும் பார்த்துத் தயங்கினாள்.

"உங்கள் தம்பியானால் இப்படி யோசிப்பீர்களா? வேறுஉதவியின்றி நீங்கள் பிள்ளையையும், பெட்டியையும் தூக்கிக்கொண்டு ஒருஅடிதானும் நகரமுடியாது மிகவும் களைத்திருக்கிறீர்கள்" என்றான் மேலும்ஜெயம்.

"இப்படித்தான் அன்றொருநாள் உங்கள்வயதுடைய ஓர்வாலிபர் உறவுகொண்டாடி ஓர் ஏழைக்குடும்பத்தை வஞ்சித்து, ஓர்பருவமங்கையின் வாழ்வில் படுவிஷத்தைக்கலந்து மீளாத்துன்பத்தில் ஆழ்த்திவிட்டுச் சென்றஇடமே தெரியாது மறைந்துபோனார்; ஆண் சந்ததியென்றால் அது பசுத்தோல் போர்த்த புலிக்கூட்டம்" என்றாள் எடுத்தாற்போல் அவள்.

"உங்கள் வாழ்வைப் பாரமாக்கிய சோகநினைவிலே மனிதரின் தாரதரம் நோக்காது உங்களைப் பேசவைத்துவிட்டது; முன்பின்தெரியவாராத ஓர்பெண்ணுடன் பேசியது என் தப்பிதந்தான், மன்னித்துக்கொள்ளுங்கள்; எனக்குப் புத்திபுகட்டியதற்காக வந்தனம்" என்று சொல்லிவிட்டு முன்னே நகர்ந்தான்.

"உள்ளடங்கிப் புகையும்அடுப்பை ஊதியதும் தீ பிடிப்பதுபோல் உங்கள் உருக்கமானசொற்கள் என் இதயத்தைத்தொட்டுப் பழையநினைவுகளைத் தட்டிஎழுப்பிவிட்டன; அதனால்தான் படபடத்துப் பேசிவிட்டேன்; வாழ்க்கைப்பாதையில் நான் மலர்ச்சோலைகளைப் பார்த்ததில்லை; உங்கள் உள்ளம்நோவப் பேசியதைப் பொறுத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் இப்பெட்டியைஎடுத்துக்கொள்ளுங்கள்; செட்டியார் தெருவைக் காட்டிவிட்டால் போதும்; பிறகு நான் என்வீட்டிற்குப் போய்விடுவேன்; செய்யாமற் செய்யும் இந்தஉதவியை நான் என்றுமே மறக்கமாட்டேன்."

"செட்டியார் தெருவிலே நீங்கள் யார்வீட்டிற்குப் போகவேண்டும்? பிறந்தநாள்முதல் நானும் அதேதெருவில்தானே வசிக்கிறேன்; இதுவரை ஓர்தரம்கூட உங்களைநான் அங்கு பார்த்த ஞாபகம் இல்லையே?"

"நீங்கள் என்னை இந்தஊரில் எங்குமே பார்த்திருக்கமாட்டீர்கள். நான் கொழும்பிலே பிறந்தேன். அங்கேயே வாழ்ந்தேன். அங்குதான் எனக்குக் கலியாணம் நடந்தது; அங்குதான் என்கண்மணி இராஜுவும் பிறந்தான். அவனுடைய அப்பாவிடம் அவனைச் சேர்க்க, அவருடன் இங்கேயேவாழ என்பிரியஅம்மாவையும் கடைசியாகப் பிரிந்துவந்து விட்டேன்."

"உங்கள் இருப்பிடம்செல்ல நாங்கள் இன்னும் அதிகதூரம் நடக்கவேண்டும்; அதற்கிடையில் உங்கள் வரலாற்றைச் சிறிதுவிளக்கமாய்ச் சொல்லுங்கள் நான் கேட்க" என்றான் ஜெயம்.

"கொழும்பிலே என் அப்பா றெயில்வேயில் ஓர் சிறுவேலையாய் இருந்தார். ஓர்நாள்இரவு அங்கு வேலைசெய்துகொண்டிருக்கும்போது விபத்துக்குள்ளாய் இறந்துபோனார். என் தாயின் அதிர்ஷ்டம், நான் அவர்களுக்கு ஒரே குழந்தை. றெயில்வேயிலிருந்து கிடைத்த சொற்பபணத்தைக்கொண்டு உள்ளகடனைத் தீர்த்தாள் என் அம்மா. கஷ்டதிசையில் இருவயிறுகளையும்வளர்க்க அம்மா அப்பஞ்சுட்டு வியாபாரஞ்செய்யஆரம்பித்தாள். அன்றுடன்று சீவியம் ஒருவிதமாய்க் கழிந்துகொண்டிருந்தது. ஓடியாடி அம்மாவுக்கு உதவிசெய்துகொண்டிருந்த நான் ஓர்நாள் வீட்டில்அடைக்கப்பட்டேன். அப்பக்கடைக்கு வந்து போகிறவர்கள் கண்ணில் நான் தென்படாதிருக்கவேண்டித் தாய் எவ்வளவோ அதிகம்கஷ்டப்பட்டாள். வசந்தா என்று என் அப்பா செல்லமாய் அழைத்த அந்தப்பெயர்மாறி அப்பக்காரிமகள் என்ற பெயரும் வந்துவிட்டது.

அப்பொழுதுதான் ஒருநாள்இரவு ஓர்வாலிபர் கையிலே ஒருபையுடன் எங்கள்குடிசைக்கு வந்தார். அம்மாவிடம் ஐம்பதுரூபா நோட்டுகளைக் கொடுத்து, "அம்மா, எனக்கு உற்றார் உறவினர் யாருமே இந்தஉலகில் இல்லை; ஊர்ஊராய் வேலைதேடிக் கொண்டு இங்குவந்தேன்; ஓர் கம்பெனியிலே வேலைகிடைத்தது; அதற்குள் குளிர்காய்ச்சல் வந்துவிட்டது; என்னைஆதரியாமல் துரத்திவிடாதீர்கள்" என்று சொல்லிக்கொண்டு தரையிலேபடுத்துவிட்டார். அம்மாவும்பரிதாபப்பட்டு ஒருநாட்டு வைத்தியரை அழைத்துவந்து அவரைப்பரிகரித்தாள். அவர் சுகமடைய ஒருமாதமாகிவிட்டது. பிறகுகாலகதியில் என்அம்மாவின் கனிந்தஉள்ளமும், என் அரிய சேவையும், பெண்மையின் அழகும் அவரைப் பெரிதும் கவர்ந்துவிட்டன; ஏழைக்கேற்ற பங்காளன்என்று என் தாய் அவரைமதித்தாள். ஓர்நாள் சனிக்கிழமை யாதொருஆடம்பரமுமின்றி அவருக்கும் எனக்கும் கலியாணம்முடிந்தது.

இன்பவாழ்வில் கொஞ்சநாள்தான் லயித்தோம். ஒருநாள் எங்கிருந்தோ அவருக்கு ஒருகடிதம் கிடைத்தது. மறுநாள் இரவு எவருக்குமே சொல்லாமல் எங்கேயோ சென்றுவிட்டார். அவர்சென்ற இடம்தெரியாது தவியாய்த் தவித்தோம். ஒருமாதம்கழித்து ஒருநாள்இரவு திருடனைப்போல் திரும்ப வீட்டிற்குவந்தார். அவரிடம் ஏராளமானரூபாநோட்டுகள்இருந்தன. அம்மாவிடம் முந்நூறுரூபாசில்லறை அள்ளிக் கொடுத்தார். கை நிறையக் காசைக்கண்டதும் அம்மா தன்கஷ்டமெல்லாம் மறந்தாள். அன்றுபோன அவர் மூன்று நான்கு மாதங்களுக்கு ஒருதரம் வருவார். அம்மா போதும் போதுமென்று சொல்லும்வரை பணம் கொடுப்பார். ஒருவாரம் வீட்டிலேயே இருப்பார், ஆனால், அவரது நடத்தையில் எனக்குச் சந்தேகமேற்பட்டது. நான் அழுதுபுலம்புவேன். இப்படியே இரு ஆண்டுகள் கழிந்தன.

கடைசியாக நானும் பூரண கர்ப்பவதியானேன். பிறகு அம்மாபூரிக்கும் வகையில் அவர் பணங்கொடுக்கவில்லை. ஏதோ ஓர் பயப்பிராந்தி அவர்முகத்தில் படர்ந்திருப்பதைக் கண்டேன். தன் உருவத்தை மாற்றிக்கொள்ள அடர்ந்த தாடி வளர்த்திருந்தார். வேதனையால் நான் துவண்டு துடிக்கும்வேளை அவர் வெளியேற முயன்றார். நான் அழுது கெஞ்சி அவரை வீட்டில் நிறுத்தினேன். அதுதான் நான் அவர்வரையில்செய்த முதல்தவறு.

பிரசவம் சுகமாய்இருக்காது என்று நினைத்தஅம்மா என்னை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்தாள். அவரும் இரண்டொருநாள் என்னை வந்து பார்த்து உற்சாகமூட்டினார். வாழ்வின் இதயஒளி செனிக்கப்போகிறான் என்று என் தாய் பூரித்தாள். என்புயல்வாழ்வின் தீபஸ்தம்பம் தோன்றப்போகிறான் என்று நான் இறுமாந்திருந்தேன். ஆனால், எங்கள்இருவரையும் விடத் தான் ஒரு அன்புக்குரிய தந்தையாகப் போகிறோமென்று குதூகலமடைய வேண்டிய அவர் துக்கத்தில் மூழ்கிக் கிடந்தார். ஏதோ ஓர் பயங்கர மனப்பிராந்தி அவர்உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தது.

அந்தச் சுபநாளும் வந்தது. பட்ட கஷ்டத்திற்கெல்லாம் பரிசுபோல் என் இராஜு பிறந்தான். பேரன் வந்துவிட்டான்என்று பாட்டி துள்ளிக்குதித்தாள். ஆனால், அவன்தந்தை மாயமாய் மறைந்துவிட்டார். இருபதுநாள் சென்று நானும் குழந்தையுடன் வீட்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## பொதுவர்த்தமானம்

### பெண்களின் மலையேற்றகோஷ்டி

இமயமலைத் தொடரிலே காட்மண்டுக்கு வடகிழக்கேயுள்ள ஜுகெல்என்ற சிகரத்தின் உச்சிக்குஏறி அதனை வெற்றிகொள்ளுமாறு பெண்களை மாத்திரமேகொண்ட முதலாவது பெண்கள் மலையேற்றக் கோஷ்டி ஒன்று டெம்ப்டாங்கிராமத்தைநோக்கிப் புறப்பட்டிருக்கின்றது. இவர்கள் எல்லோரும் ஸ்கொத்திலாந்தைச் சேர்ந்தவர்கள். இக்கோஷ்டியின் தலைவி திருமதி எச். எம். ஜாக்சன் எனும்மாது. இவர்களுடன் 25போட்டர்களும், 4ஷெர்ப்பாக்களும் செல்லுகின்றார்கள். ஜுகெல்சிகரம் 23,000 அடி உயரமுடையது. மலையேற்றக் கோஷ்டியாகப் பெண்கள் செல்வது உலகில் இதுவே முதன்முறையாகும்.

### சீனன் கவலைப்படுவதேன்?

"மேற்குஜேர்மனிக்கு அரசியற் சுதந்திரம்அருளிய பரீஸ்உடன்படிக்கையால் போர்ஆபத்து அதிகமாகிவிட்டது; ஜேர்மன்மக்களின் நலனைப் பொருட்படுத்தாமல் அவர்கள்மீண்டும் இராணுவமனப்பான்மை கொள்ளும்படி அமெரிக்க, பிரித்தானிய ஆட்சிக்குழுவினர் செய்துள்ளனர்" என்று கம்யூனிஸ்த சீனப்பிரதமர் சூ-என்-லாய் கிழக்குஜேர்மன் (ருஷிய ஆதிக்கத்திலுள்ளது) பிரதமமந்திரிக்குச் செய்திஅனுப்பியுள்ளாராம். "ஆடுநனைகிறதுஎன்று ஓநாய்அழுத" கதையேஇது. ருஷியகாடிக்கு வால்பிடிக்கும் செஞ்சீனஓநாய் ஜேர்மன் இராணுவ மனப்பான்மைபற்றி ஓலமிடுகிறது. 75 வருடங்களில் மூன்றுமுறை ஜேர்மனியால் பாழாக்கப்பட்ட பிரான்சுக்கு இல்லாத கரிசனை பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள சீனவுக்கு ஏற்பட்டிருப்பதன் மர்மம் என்னவோ!

### ராஜாஜி கூறுகின்றார்

அமெரிக்காவும் அணுக்குண்டுசெய்கிறது. சோவியற்ருஷியாவும்அணுக்குண்டு செய்கிறது. ஆனால், இராஜாஜி அணுக்குண்டுபற்றி அமெரிக்காவைத்தாக்க ஆரம்பித்துள்ளார். அணுக்குண்டுசெய்வதை அமெரிக்கா நிறுத்தாவிட்டால் அமெக்கஉதவி எதையும் நாம் பெற்றுக்கொள்ளக்கூடாதுஎன்கிறார். இந்தியா வறுமை மிகுந்தநாடு. அமெரிக்காவின் தாராள பணவுதவியாலும், பொருளுதவியாலும் அது பெரிதும் நன்மை அடைந்துவருகிறது. இந்தியாமீது அமெரிக்காவுக்குத் துவேஷமோ, சமுசயமோ இல்லையென்பதும் வெட்ட வெளிச்சம். அப்படியிருக்கத் தாத்தா இராஜாஜி இவ்வாறெல்லாம் குளறிக்கொட்டினால் மக்கள் வாளாவிருப்பார்களா? அவர்கள் ஆட்சேபித்தனர். இராஜாஜிஅதற்கு நீண்ட 'அறிக்கை' வெளியிட்டுள்ளார். தான்தவறிவிட்டதாக ஒப்புக்கொள்வதுதான் அவருடையஇயல்பு அல்லவே. தான் சொன்னதை மக்கள் 'தப்புஅபிப்பிராயம் பண்ணிக்கொண்டனர்' என்றுகூறி, வெவ்வேறு வார்த்தைகள்கொண்டு சாலவித்தைபண்ணுகிறார். அமெரிக்கஉதவியைப் 'பகிஷ்காரம்'பண்ண வேண்டுமென்று தான் சொல்லவில்லையாம். 'தியாகம்'செய்ய வேண்டுமென்றுதான் கேட்டாராம். "பகிஷ்காரம் என்ற அந்தக்கெட்ட வார்த்தையை நான் உபயோகிக்கவேயில்லை" என்று கூறுகிறார். "யாரையும் புண்படுத்தவேண்டுமென்று நான் கூறவில்லை. உலகத்திற்காக இந்தியா தன்னைத்தானே கஷ்டத்தீற்குள்ளாக்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறேன்" என்கிறார். பெர்ஹாம்பூரில் இம்மாதம் 8-ந்திகதியன்று பண்டித நேருஅவர்கள் ஒருமாபெருங் கூட்டத்தில்பேசுகையில் "ஒரு அந்நிய நாடு நிபந்தனையின்றி நமக்குஉதவி செய்ய முன்வந்தால் அவ்வுதவியை வரவேற்கிறோம்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரேசா கண்ட திருச்சிலுவை

பவேரியாவிலே, கொன்னேர்ஸ்றூத் எனுங்கிராமத்திலே நம்திருமீட்பரின் ஐந்து திருக்காய அடையாளங்கள் தனதுஉடலில் அற்புதவிதமாகப்பதியப்பெற்றுள்ள தெரேசா நியூமன் எனும்மாதுக்குப் பரிசுத்தபாப்பரசர் உண்மையான திருச்சிலுவையின் துண்டுஒன்றை அனுப்பிவைத்திருக்கின்றூர். இது அக்கிராமத்தின் சேமக்காலையிலே சமீபத்தில் நிறுவப்பெற்றபிரமாண்டமான கருங்கற் சிலுவைஒன்றின் ஆதாரபீடத்துள்வைத்து முத்திரையிடப்பட்டிருக்கிறது. இற்றைக்கு 22 வருடங்களுக்குமுன் ஓர்முறை தெரேசா நியூமனைச் சந்தித்ததும் தனக்குண்டாயிருந்த முதுகெலும்புநோய் புதுமையாகக் குணமடையப்பெற்றவரும், றைன்லாந்திலே செயுச்ரெல்ன் நகரைச்சேர்ந்த ஓர்சிற்பியுமான காள் விக்கர்மன்என்பவரால் இந்தக் கற்சிலுவை செய்யப்பட்டது.

கல்வாரியிலே கிறீஸ்துநாதர் அறையுண்ட திருச்சிலுவையைப் பலசந்தர்ப்பங்களிலும் காட்சியிற்தான்கண்ட அதேமாதிரியாகவே இந்தக்கற்சிலுவைசெய்யப்படவேண்டுமெனச் சிற்பிக்குத் தெரேசா நியூமன் ஆலோசனை கூறினுள். அந்தச்சிலுவை வழமையாகக்காணப்படும் தற்போதைய மாதிரியாயல்ல — அதாவது சிலுவையின் குறுக்குச்சட்டம் நேர்குறுக்காயல்ல, ஆனுல், மேலுங்கீழுமாகச்சரிந்து கோணுந்தரரேகைவடிவாய் அமைந்து, அதனுல் திவ்வியகர்த்தரின் திருக்கரங்கள் மேலுங்கீழுமாக நோக்கியபடி இருந்தனவென்று அவள்வர்ணித்திருக்கின்ருள். இன்னும் பாதத்தைத்தாங்கும் பாதமிதியும் அதில்இல்லையென அவள்கூறுகின்ருள்.

இரட்சகரின் திருச்சரீரத்தில் போர்வீரன்ஒருவனுல் ஈட்டிகொண்டுகுத்தித் திறக்கப்பட்ட திருவிலாக்காயம் விலாவின் இடப்புறத்தில் அல்ல, ஆனுல், வலப்புறத்தில் காணப்பட்டது; ஏனெனில், அப்போர்வீரன் இடதுபக்கத்திலிருந்தே சிலுவையை அணுகினுனென்றும் அவள்கூறுகின்ருள். அதனுல், தெரேசா நியூமன் வர்ணித்துக் கூறியபடியே சிற்பியும் இந்தச் சிலுவையைச்செய்து, தனது வேலைபற்றிய சம்பவத்தைத் தெரிவிக்கும் தனதுசாதனம் ஒன்றையும் அதன்ஆதாரபீடத்தில் வைக்கப்பட்ட உண்மையான திருச்சிலுவைப்பண்டத்தின் பக்கமாகவைத்து முத்திரையிடலாயினர்.

மேலும், "எனது சீவியகாலத்தில் வந்தவர்களைக்காட்டிலும் பெருந்தொகையான தரிசகர்கள்தானும் எனதுமரணத்தின்பின் கொன்னேர்ஸ்றூத்துக்கு வருவார்கள்; கிறீஸ்துநாதரது மரண உபாதையின்போது நான்அவரைக் கண்டதுபோல அவர்களும் இந்தச்சிலுவையைக் காண்பார்கள்" என்று தெரேசாநியூமன் கூறுகின்ருள். இந்தச்சிலுவை சுவீடன்நாட்டுக் கருங்கல்கொண்டு செய்யப்பட்டது. 140 தொன்நிறைகொண்டது. இதன் அடியில் அர்ச். மரியமதலேனம்மாளின் உருவம் ஒன்று வணங்கிவழிபடும் பாவனையாய் அமைந்திருக்கிறது.

## புராதனகால புதியஏற்பாடு

புதியஏற்பாட்டைப் பூரணமாகக்கொண்டதாய் அரமக்கிய பாஷையில் எழுதப்பட்ட அதிகம் புராதனமானதென்று அறியப்படுகின்ற கையெழுத்துப்பிரதியாகிய "யோனன் வேதபுத்தக"த்தை மொழிபெயர்க்கவிருக்கும் பண்டிதர்கள், வேதசாஸ்திர பண்டிதர்கள் குழுவுக்கு அமெரிக்க கத்தோலிக்கசர்வகலாசாலையிலே புராதனகலாஞான பேராசிரியராய்விளங்கும் டக்றர் ஜோண் ஷாப்லி அவர்கள் தலைமைதாங்கவிருக்கின்றூர். இந்தப்புதியஏற்பாட்டுநூல் சமீபத்திலே வாஷிங்ரன்நகரிலுள்ள பாராளுமன்றநூல்நிலயத்தில் காட்சிக்குவைக்கப்பட்டிருந்தது. 1600 ஆண்டுகளுக்கு முற்பட்டதும், தற்சமையம் திரு. நோர்மன் யோனன் என்பவருக்குச் சொந்தமுமான இந்தக்கையெழுத்துப் பிரதியை விலைகொடுத்து வாங்குவதற்கென்று அரமக்கிய வேதபுத்தக நிலயம்ஒன்று அடியிடப்பட்டிருக்கிறது. இதன் விலை இன்னதென்று இதுவரை சொல்லப்படாதபோதிலும் சமீபத்திலே காட்சிக்குவைப்பதற்காக இது வங்கிநிலவறையிலிருந்து பாராளுமன்றநூல்நிலய நிலவறைக்குக் கொண்டுபோகப்பட்ட ஒன்றரை மணிநேரத்துக்குமாக ஐந்துலட்சம் பவுணுக்கு இன்சூர் செய்யப்பட்டிருந்தது. இது அநேக நூற்ருண்டுகளாக அசீரிய மாலெக் யோனன்குடும்பத்தினரால் காப்பாற்றப்பட்டுவந்தது. இவர்கள் முதலாவது உலகயுத்தத்தின்பின் கூடிஸ்தான்நாட்டிலிருந்து தப்பியோடிவிட்டார்கள்.

## "பரிசுத்த தையற்காரர்"

தம்மிடம்விளங்கிய தேவபக்திகாரணமாகப் "பரிசுத்த தையற்காரர்" எனும் நாமம்வழங்கப்பெற்றவரான சங். மெயின்ரூட் ஈயூக்ஸ்ரர்பிறதருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டும்விஷயமாய்த் திருச்சடங்காசார திருச்சங்கம் சிலதினங்களின்முன் அவரதுபுண்ணியங்களின் வீரத்துவத்தைப்பற்றிக் கலந்துவிவாதித்திருக்கிறது. இவர் தமது பன்னிரண்டாம்வயதிலே புடவைமில்ஒன்றில் வேலைசெய்யத் தொடங்கினுர். பிந்தத் தையல் வேலையைத் தமதுதொழிலாகக் கொண்டார். சுவிற்சர்லாந்திலே எயின்சியெடெல்ன் எனுமிடத்திலுள்ள ஆசிர்வாதப்பர்சபை ஆச்சிரமத்தில் ஓர்சந்நியாசியாகச்சேர்ந்தபின் இவர் ஐம்பது வருடகாலமாக அந்தஆச்சிரமத்தின் தையற்காரராகக கடமைபார்த்துவந்தார். 1925-ம்ஆண்டு இவர்மரிக்குமுன்னரே இவரது பரிசுத்ததனம் எங்கும்பரிமளித்துப் பிரஸ்தாபம்அடையலாயிற்று.

## சர்வதேசசற்பிரசாதமகாநாடு

தென்னமெரிக்காவிலே பிறேசில்நாட்டின் தலைப்பட்டணமாகிய றையோ டி ஜனேய்றோ நகரில் வருகிறஆடிமாதம் நடந்தேறவிருக்கும் 36-வது சர்வதேச சற்பிரசாத மகாநாட்டுக்குப் பிறநாடுகளிலிருந்து பத்து லட்சம்பேருக்குமேற்பட்ட யாத்திரிகர்கள் சமுகமளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் ஏறக்குறைய இருபது கருதினுல்மாரும் அடங்குவர். இவர்களெல்லாம் ஆகாயமார்க்கமாகப் போனுலென்ன, கடல் மார்க்கமாகப் போனுலென்ன, முந்தமுந்த அந்நகரிலே இவர்கள்அவதானிக்கும் பலகாரியங்களில், கோர்க்கோவாடோ குன்றின்மேல் இரண்டாயிரம் அடி உயரத்தில் தனது கரங்களை மேலேஉயர்த்தியபடி நிறுவிநிற்கின்ற நமதுதிவ்வியகர்த்தரின் இராட்சதசுரூபமும் ஒன்ருயிருக்கும். பிறேசில்நாடு சுதந்திரம் அடைந்த நூரும்ஆண்டுவிழா ஞாபகார்த்தமாக 1922-ம் ஆண்டு இதுநிறுவப்படலாயிற்று. லத்தீன்அமெரிக்க நாடுகளிலே இதற்குமுன் ஒரேயொருமுறையாகச்சர்வதேசசற்பிரசாதமகாநாடு ஆர்ஜென்ரினு நாட்டின் தலைப்பட்டணமாகிய புவெனேஸ்அயேர்ஸ் நகரில் நிகழ்ந்திருக்கிறது.

## யூதர்களின் சந்மானங்கள்

நாஸிகளாலும், பாசிஸ்தர்களாலும் துன்புறுத்தப்பட்ட யூதர்களின்உயிரைப் பாதுகாத்துவைக்குமாறு செய்த முயற்சிகளையிட்டு நான்கு குருமார்உட்பட 23 இத்தாலியகத்தோலிக்கருக்கு அத்தேசத்திலுள்ள யூதசமூகங்கள் சமீபத்திலே மிலான்நகரில்வைத்து 23 தங்கவிருதுகளைச் சந்மானித்திருக்கின்றன. இவற்றிலே ஏழு தங்கவிருதுகள் யூதர்களுக்கு உதவிசெய்ததற்கும், அவர்களுக்கு உறைவிடம் அருளியதற்குமாகக் கழுவேற்றப்பட்ட, அன்றேல் இம்சிக்கப்பெற்றகாரணமாக இறந்துபட்ட ஏழு பேருக்கு அவர்கள்இறந்தபின்னரே வழங்கப்பட்டனவாகும். இத்தாலிய யூதசமூகங்களின் பிரதிநிதிகள் அவ்வேளை ஆற்றிய சொற்பொழிவுகளிலே, மிகமேம்பட்ட வீரத்துவம் காண்பித்ததையிட்டு இந்த 23 பேரும் தெரியப்பட்டார்களென்றும், ஆனுல், பெரும்பரித்தியாகஞ்செய்து தங்களுக்குஉதவிசெய்த இத்தாலியமக்கள் அனைவருக்குமே இத்தாலியயூதர்கள் நன்றிக்கடன் உள்ளவர்களென்று தெரிவித்துநின்ருர்கள்.

## குருபுதல்வர்களின் தந்தை

எட்டுப்பிள்ளைகளின் தந்தையும், 22 பிள்ளைகளின் பாட்டனுமான திரு. லெயோ டெனர் அவர்கள்அமெரிக்கஐக்கியதேச கொன்யேர்ஸ்நகரிலுள்ள திவ்வியஇஸ்பிரீத்துசாந்து மாதாவின் சந்நியாசஆச்சிரமத்திலே சமீபத்தில் ஓர்திறப்பிஸ்ற் சந்நியாசியாக ஈருந்தவாக்குத்தத்தம் கொடுத்திருக்கின்றூர். இளைப்பாறிய ஓர் சுருட்டுமுதலாளியான இவர் தாரமிழந்தவர். இவர்மனைவி 1943-ம்ஆண்டின் "கத்தோலிக்க தாய்" ஆகத் தெரிந்தெடுக்கப் பெற்றிருந்தாள். இவர் ஈருந்தவாக்குத்தத்தம்அருளிய திருவைபவத்தின்போது அவருடைய மூன்று குருபுதல்வர்களும், மற்றும்இரு புத்திரர்களும் சமுகமாயிருந்தார்கள். தற்போதுஇவர் அந்த ஆச்சிரமத்திலே தமதுஉடன் சந்நியாசிகளால் பிறதர்அம்புரோஸ்என அறியப்பெற்றுவருகின்ரூர். இந்தஆச்சிரமம் அவரது புதல்வர்களில்ஒருவரையும் அடக்கியுள்ளது.

* * *

● சீனுவிலே பொக்ஸர்கலகத்தின்போது வேதத்துக்காகத் தங்கள்பிராணனைத் தியாகஞ்செய்த 56 வேதசாட்சிகளுக்கும் சமீபத்திலே முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்பட்டதன்மேல் பரிசுத்தபாப்பரசர் சம்பேதுருவானவர் மகாலய சதுக்கத்தினூடாய் ஊர்வலமாகச் சுமந்துசெல்லப்பெற்றபோது, யாத்திரிகரால் கொடுக்கப்பட்ட வெள்ளைநிறமான தலைக்குல்லாக்களை வாங்கிச் சிலகணம் அணிந்திருப்பதற்கும், திரும்பஎடுத்துக் கொடுப்பதற்குமாகப் 15 தடவை தரிக்கலாயினர். இந்தக்குல்லாக்கள் அந்தயாத்திரிகரால் தங்கள்வீட்டுக்குப் பூச்சியமான பொருட்களாகத் திரும்பவும் கொண்டுபோகப்படலாயின.

# பஞ்சாங்க திருத்த ஆட்சேபம்

தற்போது பாவனையில் இருந்துவருகின்ற கிறகோரியாரின் பஞ்சாங்கத்தைத் திருத்தும்விஷயமாய் அபிப்பிராயம் தெரிவிக்குமாறு ஐக்கியநாடுகளின்ஸ்தாபனம் பலநாடுகளுக்கும் சிலகாலத்தின்முன் வேண்டுகோள் விடுத்திருந்தது. அதற்குப் பஞ்சாங்கதிருத்தஞ்செய்வதைச் சமயமுகாந்திரங்களையிட்டு அநேகநாடுகள் ஆட்சேபித்துப் பதில்தெரிவித்திருக்கின்றன. இதுவிஷயத்தை மேலும் பரிசீலனை செய்வதானது சர்வதேசஉடன்பாட்டிலும், விசேஷமாய்க் கத்தோலிக்கதிருச்சபையின் உடன்பாட்டிலும் தங்கியிருக்கிறதென அயர்லாந்து பதில்அளித்திருக்கிறது. இயற்கையாகத் தொடர்ந்துவரும் வெள்ளிக்கிழமைகளை நிலைபெயர்ப்பதானது முஸ்லீம்களால் ஏற்கமுடியாததென்று சொல்லிச் சமயமுகாந்திரத்தையிட்டுப் பஞ்சாங்கதிருத்தத்தைப் பாகிஸ்தான் எதிர்த்துநிற்கின்றது. மிகப்பெரும்பான்மையாய் ஓர்புத்தசமய நாடாகிய பர்மாவோ ஒவ்வோர்வருடத்திலும் வாரநாள்ஒன்றையும், லீப்பியர் வருடத்திலே இரண்டுவாரநாட்களையும் தவிர்ப்பதானது தன்னுடைய சமய அனுட்டானத்துக்கு முரண்பட்டதெனக் கூறியிருக்கின்றது. இதுவரை பதில் அளித்துள்ள 19 நாடுகளிலும் அநேகநாடுகள் தற்போதுபாவனையில் இருந்துவருகின்ற கிறகோரியாரின்பஞ்சாங்கம் குறையற்றவகையிலே பூரணமாக வேலைசெய்கின்றதெனப் பதிலிறுத்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகாசி மாதம்

போதுக் கருத்து: கிறீஸ்துவ தர்மத்துக்குத் தகுந்தபடி கன்னிமை அந்தஸ்தை மதிக்க வேண்டிக் கொள்வது.

மிஷன் கருத்து: பிலிப்பைன் தீவுகளில் தேவ அழைத்தல் பெருகுவதற்காக மன்ருடிக் கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
வைகாசி மாதம் 19-ந் திகதி

## தொழிலாளரான அர்ச். சூசையப்பர்

பரிசுத்த கன்னிமரியாயின் விரத்தபத்தாவும், தேவசுதனின் திருக்கைத்தாதையுமாகிய அர்ச். சூசையப்பர்பேரால் நாம் வருடந்தோறும் இருதிருநாட்களைக் கொண்டாடி, அத்திருமாதவனின் புகழைப்பாடி, அவர் சலுகையை இரந்துதேடி வருகின்ரேம். அவற்றில் முதலாவதாகப் பங்குனிமாதம் 19-ந் திகதியன்று அர்ச். சூசையப்பர் திருநாளென்று ஓர்பெருநாளைக் கொண்டாடி வருகின்ரேம். இரண்டாவதாக, தவளோற்சவ ஞாயிறுக்குப்பின்வரும் பத்தாம் நாள்—அதாவது பாஸ்குத்திருநாளுக்குப்பின்வரும் மூன்ருவது புதன்கிழமையன்று சாதாரண திருச்சபையின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் திருநாளன்று மற்ரேர்பெருநாளைக் கொண்டாடிவருகின்ரேம். இப்போது அம்முனிபுங்கவர் பேரால் மற்றுமோர்திருநாளை வருடந்தோறும் கொண்டாடும் பேரதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறதென்பதை அறியவருங்கால் அவர் பக்தர்களெல்லாம் ஆனந்த பரவசம் எய்துவார்களென்பதில் ஐயமேயில்லை.

"மே தினம்" என்று அகிலமுழுவதும் அறியப்படுவதாகிய நிகழும் வைகாசிமாதம் 1-ந் திகதியன்று ரோமாபுரியிலே, அர்ச். பேதுருவானவர் மகாலய சதுக்கத்திலே, கத்தோலிக்க தொழிலாளர்களும், யாத்திரிகர்களுமாக இரண்டுலட்சம்மக்கள் சனசமுத்திரம்போலக் குழுமியிருந்தசமுகத்திலே பரிசுத்த பிதா 12-ம்பத்திநாத பாப்பரசர் 'மேதின'மாகிய வைகாசி மாதத்தின் முதலாவது நாளைத் தொழிலாளரான அர்ச். சூசையப்பரின் திருச்சடங்குமுறையான திருநாளாக ஏற்படுத்தி, அது இனிமேல் திருச்சபையில் வருடந்தோறும் கொண்டாடப்படவேண்டுமெனப் பிரகடனஞ் செய்திருக்கின்ருர். அவ்வேளை பரிசுத்தபிதா பேசியபோது: பாப்பாண்டவரும், திருச்சபையும் தொழிலாளர்களுக்கு வழிகாட்டுவதும், அவர்களைப்பார்து காத்து நேசிப்பதுமாகிய தெய்வீக கடமையிலிருந்து விலகிப் பின்வாங்கமுடியாது; இந்தக் கடமையைக் கிறீஸ்துநாதரின் பதிலாளியாகிய நாம் இங்கே இந்த வைகாசிமுதலாந் திகதியாகியஇன்று தெளிவாக உறுதிப் படுத்த விரும்புகிரேம்; தொழிலின் மகத்துவத்தை எல்லோரும்உணர்ந்துஒப்புக்கொள்ளவேண்டும், இந்தமகத்துவமானது உரிமைகளையும், கடமைகளையும் சமமாகப்பங்கிடுசெய்வதிலே அடியிடப்பட்ட சமூக ஒழுங்குகள், சட்டங்களை ஆக்குவதில் தூண்டுகோலாய் இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே தொழில்உலகமானது இந்தநாளைத் தனக்குரிய ஓர் தகுதியான பெருநாளாக உரிமைபாராட்டுகின்றது; இந்த விதமாகக் கிறீஸ்துவதொழிலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கிறீஸ்துவ ஞானஸ்நானம் போல்பெறப்பட்ட வைகாசி 1-ந் திகதியானது பிணக்கையும், குரோதத்தையும், பலாத்காரத்தையும் எட்டுணையுமே தூண்டிவிடும்நாளல்ல. ஆனல், சமூக சமாதானத்துக்கு இன்னுமே தேவைப்படுவதைப் பூர்த்திசெய்யும்படியாகத் தற்காலசமூகத்துக்கு மீட்டும்விடுக்கப்படும் ஓர் அழைப்பின்நாளேயாகும். ஆகவே, ஓர்கிறீஸ்துவ பெருநாள் என்பது, பெரிய தொழில்குடும்பத்தினது கிறீஸ்துவநோக்கங்களின் ஸ்திரமும், விருத்திகரமுமான வெற்றியையிட்டுக் குதூகலிக்கும் ஓர்நாளேயாகும்; உங்கள்மனங்களில் இந்தக்கருத்து ஊன்றி நிலைபெற்றிருக்குமாறு தொழிலாளரான அர்ச். சூசையப்பரின் திருநாளைத் திருச்சடங்குமுறையாக ஏற்படுத்தி, அது இந்தவைகாசி 1-ந் திகதியன்றே கொண்டாடப்படவேண்டுமென நாம் நிர்ணயித்துள்ளோம் என்பதை உங்களுக்குஅறிவிப்பதில் நாம் ஆனந்தங் கொள்ளுகிரேமெனக் கூறினின்ருர்.

அர்ச். சூசையப்பரைச் சாதாரண திருச்சபையின் பாதுகாவலராகப் பிரகடனஞ்செய்தருளினர் 9-ம் பத்திநாத பாப்பானவர். "அவவுடைய அதிவிரத்த பத்தாவாகிய அர்ச்.சூசையப்பர் ஸ்துதிக்கப்படுவாராக!" எனும் ஸ்துதியைத் தேவஸ்துதிகளில் சேர்த்துவிட்டார் 11-ம் பத்திநாத பாப்பானவர். தற்போது நாம் சொல்லிவரும் அர்ச். சூசையப்பரின் அருமையானபிரார்த்தனையை அங்கீகரித்தருளினர் சூசையப்பு சாத்தோவாகிய அர்ச். பத்தாம பத்திநாதர். இப்போது தொழிலாளரான அர்ச். சூசையப்பர்திருநாளை ஏற்படுத்தி, மேதினவிழாவாக அது கொண்டாடப்படவேண்டுமெனப் பிரகடனஞ் செய்திருக்கின்ருர் தற்போதைய 12-ம் பத்திநாத பாப்பரசர். தொழிலாளிகளுக்கு மாதிரிகையாய் விளங்கும் தொழிலாளரான அர்ச். சூசையப்பர் திருநாளை மேதினவிழாவாகக்கொண்டாட வழிபண்ணியிருக்கும் பரிசுத்த பிதாவுக்குக் கிறீஸ்துவ தொழிலாளர்உலகம் என்றுமே கடமைப்பட்டதென்க! மாதாவின் வணக்கமாதமாகிய மேமாதம் தொழிலாளரான அர்ச். சூசையப்பர் திருநாளோடு ஆரம்பமாகி, அரசியான தேவமாதாவின் திருநாளோடு முடிவதும் அதுபெற்ற ஓர்பெரும் அதிர்ஷ்டமேயென்க.



மேற்றிராணித்துவ அபிஷேக
ஆருவது வருட
நிறைவு தினம்

யாழ்ப்பாண மேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவர் அவர்கள் மேற்றிராணித்துவ அபிஷேகம் செய்யப்பெற்ற ஆருவது வருட நிறைவு தினம் நிகழும் வைகாசிமாதம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வருகின்றது. அதனல் ஆண்டவர் அவர்களின் ஞானமக்களாய் இம்மேற்றிராசனத்தில் வதியும் கத்தோலிக்க மக்கள் சகலரும் அன்றுதினம் திவ்வியபூசைகண்டு, திவ்வியநன்மை பெற்று, விசேஷசெபங்கள்செய்து எமது ஞானமேய்ப்பரின் நற்கருத்துகள் நிறைவேறும்படியும், அவர் கையிடும் சற்கருமங்கள் கைகூடும்படியும் விசேஷவிதமாக மன்ருடிக் கொள்வார்களாக!

### மேற்றிராணியாருக்காகச் செபம்

தேவரீர் உமது யாழ்ப்பாணத் திருச்சபையை நடப்பிக்கும் மேய்ப்பராக வைக்கச் சித்தமான ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை எனும் உம்முடைய ஊழியரைத் தயவோடு கண்ணோக்கி, அவர் தாம் நடப்பிப்போருக்கு வாக்கினுலும், முன்மாதிரியினுலும் நன்மை செய்பவராகி, அதினல் தமக்கு ஒப்படைக்கப்பட்ட மந்தையோடுகூட நித்திய சீவியத்தை அடைந்து கொள்ளும்படி அனுக்கிரகம் பண்ணியருளும். தேவரீரோடும், இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏகசருவேசுரனுமாய், சதாகாலஞ்சீவியராக இராச்சியபாரம் பண்ணுகிற வருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக் கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்.

### பாட்டனன சந்நியாசியார்

ஒல்லாந்திலே சன்டேட்எனுமிடத்திலுள்ள திறப்பிஸ்ற் சந்நியாசசபை ஆச்சிரமத்தில் பிறதர் ரெசேலினுஸ்அவர்கள் சமீபத்தில் நித்தியவாக்குத்தத்தம் அருளலாயினர். தற்போது 72 வயதுடையவரான இவர் ஐந்துவருடங்களின்முன் இந்த ஆச்சிரமத்தில் சேரலாயினர். இவர் பதினைந்துபிள்ளைகளுக்குத் தந்தையாவர். 1925-ம் ஆண்டு கிறிஸ்மஸ்தினமன்று இவர் தமதுமனைவியை இழந்தார். இவருடைய பிள்ளைகளிலும்ஐவர் இறந்துபோயினர். ஒன்பதுபேர் விவாகஞ் செய்திருக்கின்றனர். புதல்வர்ஒருவர் சன்டேட் சந்நியாசஆச்சிரமத்தில்சேர்ந்தார். தற்போது இவர் வண. மைக்கேல் சுவாமியாரென அறியப்படுகின்ருர். பிறதர் ரெசேலினுஸின் 56 பேரப்பிள்ளைகளில் ஒருவர் எற்றெம்நகரிலுள்ள பிரான்சிஸ்கன்சபைக் கன்னியாஸ்திரிகள்மடத்தில் சேர்ந்திருக்கின்ருர்.

## பாத்திமாகிரித் திருச்சேத்திரம்

### பண்டத்தெருப்பு

இப்புனிதசேத்திர வருடாந்த மகோற்சவமானது சென்ற 13-ந்திகதி வெள்ளிவாரம் மிகுந்த அமைதியோடும், பத்தியருட்சியோடும் கொண்டாடப்பெற்றது. திருநாளுக்கு முதல்நாள் அந்திமாலையின் செவ்வொளிபடர்ந்து, அழகுபொழியுந்தருணம், யாத்திரிகர்கள திரள்திரளாகச் சேத்திரத்தில்வந்து குவிந்தனர். இரவானதும் எண்ணற்ற மக்கள்எள்விழஇடமின்றிக்கோயில்வளவைச் சூழ்ந்துகொண்டனர். இரவைப் பகலாக்கிவிட்ட பெருமையோடு கோவிலையும், சுற்றுப்புறங்களையும், சிங்காரித்துப் பிரகாசித்தன மின்சாரதீபங்கள். வர்ணக்கொடிகளாலும், வண்ண மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த பலிபீடஸ்தானம் கண்ணையும்கருத்தையும் ஒருங்கே கவர்ந்துநின்றது. குருப்பிரசாதிகள்பலர் பாவசங்கீர்த்தனத் தொட்டிகளில்அமர்ந்து பாவசங்கீர்த்தனம் கேட்டவண்ணமேயிருந்தனர்.

மாலை 7 மணியானது. மரியாயின் நீலப்படைமுகாமைக்காரர் ஒன்றுகூடி முன்னேற்றவிஷயங்கள் பலவற்றை ஆலோசித்தனர். இவ்வாண்டு ஆவணி 20-ந்திகதியைக் கூட்டத்தின் வருடாந்த நாளாய் நியமனஞ்செய்து அந்நாளை யாழ்நகரிற்கூடிக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர், வண. ஜி. ரி. பாலசுந்தரம் (புதியவேதப்பகுதிப்பரிபாலனர்) சுவாமியவர்களுக்கும், திரு. பி. எம். வேதநாயகம் (பேராசிரியர், பலாலி அரசினர் பயிற்சிக்கலாசாலை) அவர்களுக்குமிடையில் பொதுவுடைமைக் கொள்கைகளைஉடைத்து அர்த்தசாரம் மிக்கதோர் தர்க்கப்பிரசங்கம் நடைபெற்றது.

ஒலிபெருக்கியின் உதவியால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பிரசங்கத்தின் ஆழ்ந்தகருத்துக்களையும், அறிவுரைகளையும் செவிசாய்த்துக்கேட்டுப் பெரும்பயனெய்தினர். இடையிடையே ஆசிரியர் வேதநாயகம் அவர்களால் இயற்றப்பெற்ற அரியபாடல்கள் பக்கவாத்தியங்களுடன் படிக்கப்பெற்றுப் பிரசங்கத்துக்கு மிக்கசோபையளித்தது. சபையோருக்கும் உற்சாகந்தந்தது.

தர்க்கப்பிரசங்கத்தின்பின் வண. கட்டளைச்சுவாமியவர்களால் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ்செய்துவைக்கப்பட்டுச் செபமாலை ஆரம்பமாயிறது. இனியதொனியோடு பாலர்கள் ஒலிபரப்பிமூலம் பிரியதத்தமணிகளை ஓதினர். பக்திவேகத்தோடு எல்லோரும் செபமாலையில் பங்குபற்றியநிகழ்ச்சி பரவசமூட்டியது. காரணிக்கங்களுக்கு இடையிடையே கோவில்கீர்த்தனங்கள் இன்னிசையோடு படிக்கப்பெற்றமையானது பக்திமுயற்சியைப் பலநூறு மடங்கு அழகுறச்செய்தது.

செபமாலையின்பின்னர், மேற்றிராணியாண்டவரவர்களின் காரியதரிசியான வண. ஏ. மைக்கேல்சாமி சுவாமியவர்கள் 'குடும்பசெபமாலை' என்னும்விஷயம்பற்றிச் சொல்லழகும், பொருளழகும், இசையழகும் பொதியப் பல உதாரணங்களோடு அரியதோர் பிரசங்கமாரிபெய்தனர். "ஒருமித்துச் செபிக்கும்குடும்பம் ஒருமித்துவாழும்" என்னும் பொன்மொழியைக் குரவாவர்கள் ஆணித்தரமாய்க்கூறிச் சபையோருளத்தில் பசுமரத்தாணிபோற் பதியச்செய்தனர்.

நடுநிசி பன்னிரண்டு மணியானது. மிகவண. விக்கார் ஜெனறல் சுவாமியவர்கள் திவ்வியபூசை ஆரம்பித்தார். பூசையில் திரளானசனங்கள் திருவிருந்தருந்தினர். அவ்வேளை ஐந்துகுருமார் அரைமணிநேரத்துக்குமேல் திவ்வியநன்மைவழங்கினர். இவ்வாறுகப் பாத்திமாமாதாவின் வழியாக அவரது திருச்சுதன்யேசுவைஅடைந்த யாத்திரிகர்குழாம் சொல்லொண்ணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிவேத் மலையில் ஆரோகணம்

பின்பு அவர்களை வெளியே பெத்தேனியாவுக்குக் கூட்டிக் கொண்டுபோய், தம்முடைய கரங்களை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அப்பொழுது சமபவித்ததேதெனில் அவர்களை அவர் ஆசீர்வதிக்கும்போது, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்க அவர்களிடத்திலிருந்துபிரிந்து, உயர எழுந்தருளிப் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப் பட்டார். அப்பொழுது ஓர்மேகம்வந்து அவர்களுடைய கண்களுக்கு அவரை மறைத்தது. கர்த்தராகிய யேசுநாதர் இவ்விதமாய்ப் பரலோகத்திற்கு எழுந்தருளிச் சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார் — லூக். XXIV. 50-51, அப். நட. I. 9, மாற். XVI. 19.



அவர் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகிறதை அவர்கள் கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ வெண்ணுடையணிந்தவர்களாகிய இரண்டு பேர் அவர்கள் அருகே வந்து நின்று, அவர்களை நோக்கி: "கலிலேயமனிதரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த யேசுநாதர் எப்படிப் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகக்கண்டீர்களோ, அப்படியே திரும்பவும்வருவார்" என்றார்கள். அவர்களோ, அவரை ஆராதித்து மிகுந்தசந்தோஷத்துடனே ஜெருசலேமுக்குச் சமீபமாய் ஓர் ஓய்வுநாள் பிரயாணத்துக்குள் இருக்கிறஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து, ஜெருசலேமுக்குத்திரும்பிவந்து, எப்பொழுதும் தேவாலயத்தில் சர்வேசுரனைத் துதித்துப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் (இஸ்பிரீத்துசாந்துவின் வருகைக்குப்பின்) புறப்பட்டுப்போய் எங்கும் பிரசங்கித்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு உடனுதவிசெய்து, தொடர்ந்து நடந்த அற்புதங்களால் அவர்களுடைய வாக்கியத்தை உறுதிப்படுத்தினர். ஆமென் — அப். நட. I. 10-12, லூக். XXIV. 52-53, மாற். XVI. 20.

---

## அர்ச். சூசையப்பரின் அடைக்கலத் திருநாள்

### கொழும்புத்துறை

இத்திருநாள் வழமைப் பிரகாரம் கொழும்புத்துறைத் தாபனத்திலே நிகழும் வைகாசிமாதம் 22-ந் திகதி (22-5-55) ஞாயிற்றுக்கிழமை பக்திச்சிறப்பாகக் கொண்டாடப்படும். இத்திருநாளுக்குச் சமுகந் தரும்படியாய் அர்ச். சூசையப்பரின் பக்தர்களையும், தாபன பழையமாணவர்களையும் அன்பாய் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சிகள்

**21-5-55 சனிக்கிழமை :**
மாலை 7-15 மணிக்கு மாலை ஆராதனையும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும்.

**22-5-55 ஞாயிற்றுக்கிழமை :**
காலை 6-30 மணிக்குப் பாடற்பூசை. 11 மணிக்குப் பழையமாணவர்சங்க வருடாந்தபொதுக் கூட்டம்.

மாலை 4-30 மணிக்கு மாலை ஆராதனையும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும்.

கொழும்புத்துறை
11-5-55.

தாபனத்தலைவர்

---

ஆனந்தம்கொண்டது. வீண்வேடிக்கைகளும், வியாபாரகேளிக்கைகளும், பராக்குகளும்இன்றிப் பாத்திமாகிரித் திருச்சேத்திரத்திலே இம்மகோற்சவம் ஒரே பத்தியருட்சி நிரம்பியதாகக் காட்சியளித்து நிறைவாயிற்று.

— கடிதர்

## திருஇருதய வணக்கமாதம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் அதிககாலங்கண்ட குருப்பிரசாதிகளில் ஒருவரான வண. யோசெவ் அல்போன்ஸ்சுவாமியவர்கள் தமதுமுதுவயதில் அருந்திவருந்தி அழகாக எழுதி அச்சேற்றியுள்ள ஓர்அருமையான புத்தகம். பிரான்சியபாஷையிலே வண. பேர்வியோ சுவாமியாரால் எழுதப்பெற்று, ஆங்கிலபாஷையில் மொழிபெயர்க்கப்பட்ட திருஇருதய வணக்கமாதப் புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டே அவர் இதனைஎழுதலாயினர். எவருமேஇலகுவில் வாசித்து விளங்கக்கூடிய இனிமையானதமிழிலே பக்திப்பரவசம் உண்டுபண்ணக்கூடிய முறையிலேஅழகாக எழுதப்பட்டுள்ளது. திருஇருதயப் பக்தர்களுக்கெல்லாம் ஓர்பொக்ஷம் போன்றது.

**விலை பிரதி ரூபா 1 சதம் 50.**

பின்வரும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின்திரு இரக்கத்தினாலும், அர்ச். நீத்தம்மாளின் வேண்டுதலினாலும் எனதுபுத்தாவின் உத்தியோகவிஷயமாக நான் இரந்துகேட்ட மன்றாட்டுக்கிடைக்கப்பெற்றேன். அதனால் அவர்களின் நாமத்துக்குத் தோத்திரமாக நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கிறேன். இவர்களின்நாமம் என்றும் எங்கும் மகிமையடைவதாக.

பாண்டியன்தாழ்வு. V. J.

## புத்தக மதிப்புரைகள்

### வீரப் பெண்ணின் வீரப் புதல்வி

**(சிநேகப் புதல்வி ரொஸாலி சகோதரியின் அரிய சரித்திரம்)**

தமிழாக்கம் : சங். J. M. நீக்கோலாஸ்.
விலை : 12 அணா.
கிடைக்குமிடம் : J. M. நீக்கோலாஸ் சுவாமி,
பிஷப் இல்லம், தூத்துக்குடி.

அர்ச். வின்சென்ட் தெப் பால் என்பவருடைய சிநேகபுதல்விகளின் சபைத்தலைவியாகத் திகழ்ந்து தமது சாந்த குணத்தாலும், அன்பாலும், இரக்கத்தாலும் தரித்திரருக்கு ஆதரவாகியும், நோயுடையார்க்கு மருந்தாகியும் பயங்கரப் புரட்சிகளால் நலிவு கொண்ட பிரான்ஸ்தேசத்துக்குப் புத்துயிரளித்த வீரவனிதையாகிய ரொஸாலி சகோதரியின் அரியசரிதையை விளக்குவது இந்நூல். அன்பின் அபாரசக்தியை மறந்து, சுயநலமே சுகவாழ்வென மதிமயங்கி நிலைகெட்ட இன்றைய மக்கட்சமூகத்திற்கு அன்புகொண்டு அன்புசெய்வதே அழியா இன்பம் எனக்கொண்டு பிறருக்காகத் தன்னைத்தானே மறந்துவாழ்ந்த மாதர்திலகமாகிய இவ்அன்னையாரின் சீவியசரிதம் சிறந்தவழிகாட்டியாக உதவுமென்பதற் கெட்டுணையும் ஐயமில்லை. இந்நூலின் ஆசிரியரோ கத்தோலிக்கஎழுத்தாளருள் தலைசிறந்தவருள் ஒருவர். இருநூறு புத்தகங்களுக்குமேல் எழுதித் தமிழ்நாட்டு டானியல் லார்ட்என அறியப்படுகின்றவர். சொல்நயம், பொருள்நயம்முதலாம் பன்னயங்களும் ஒருங்கமைய, சோகரசம், இன்பரசம் பெருகத் தெள்ளியநடையில் அமைந்துள்ள இந்நூல்[illegible]ரின் எழுத்துவன்மையைப் புலப்படுத்துவதாகும். எத்தகைய அந்தஸ்துடையவர்க்கும் எண்ணிறந்தநன்மை அளிக்கத்தக்க இந்நூலை தமிழர்களும்படித்துணர வழிவகுத்த அடிகளாருக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டதாகும். எமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகிறோம்.

### ஆசிரியன்

கௌரவ ஆசிரியர்கள் :
வித்துவான் சி. இ. கந்தசாமி,
திரு. நா. தம்பிரத்தினம்.

நிர்வாக ஆசிரியர் :
பண்டிதர் க. யோ. பெ. ஆசிநாதன்.

வருட சந்தா ரூபா 3-00.

"தமிழ்மொழி தமிழ்ப்பணி தமிழ்க்கலையாம்—இவை
தழைத்திட உழைத்திடல் நம்நிலையாம்"

என்ற மணிவாக்கியத்தைக் குறிக்கோளாகக்கொண்ட அகிலஇலங்கைத் தமிழாசிரியர்சங்க வெளியீடாக அமைந்தது இச்சஞ்சிகை. ஆசிரியரின் கடமைகளை உணர்த்தி, உரிமைகளைநாட்டி, தாய்மொழியைக் காத்துத் தமிழ்நாட்டுப் பணபாட்டை வளம்படுத்துமுகமாக வெளிவந்துள்ள இவ்விதழைத் தமிழாசிரியர்கள் உவந்து வரவேற்பார்களென்பதற்கு ஐயமில்லை. இவ்விதழிலே பேராசிரியர்கள் பலரதும் கட்டுரைகள் திகழ்கின்றன. அத்தோடு ஆசிரியரின் புதிய சம்பளத்திட்டம்பற்றிய விபரங்களும் அடங்கியுள்ளன. தமிழாசிரியர்களின் தரத்தை உயர்த்தி, அவர்களின் நலவுரிமைகளை வளர்க்கும் இவ்விதழைத் தமிழர்கள் ஆதரிப்பார்களென நம்புகிறோம். எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகிறோம்.

---

● ரோமாபுரியிலே சம்பேதுருவானவர்மகாலய விசாரணைப்பங்குக்குரவராய் விளங்கியிருந்தவரான 77 வயதுடைய பெறெற்றி அதிமேற்றிராணியார் காலஞ்சென்றுவிட்டாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. இவர் இளம்பிராயமுதல் பரிசுத்தபாப்பரசரின் பிரியநண்பராய் இருந்துவந்தார். இவர் சம்பேதுருவானவர் மகாலய பங்குக்குரவராய் மாத்திரமல்ல, ரோமாபுரியிலுள்ள சகலஆஸ்பத்திரிகளினதும் பிரதமவிசாரணைக்குரவராயும் இருந்துவந்தார்.

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

24-5-55 செவ்வாய்க்கிழமை பகிரங்க விடுமுறைநாளாக விருப்பதால் அன்று பாடசாலைகள் நடைபெறக் கூடாது.

23-5-55 இல் பாடசாலை நடைபெறவேண்டும்.

**T. A. J. Mathuranayagam,**
Gen. Manager of R.C. Schools
Jaffna, 16-5-55.

## இலங்கைஅரசினர் புகையிரதப்பகுதி புகையிரதக்கடவைத் திருத்தங்கள்

1955-ம் ஆண்டு மே மாதம் 28-ந்திகதி மாலை 6 மணிதொடக்கம் மறுநாட்காலை (29-5-55) 6 மணிவரைக்கும் கீழேகூறப்பட்டிருக்கும் புகையிரதக் கடவைகள திருத்தப்படும்.

(1) யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலிருந்து 76 சங்கிலிக்கப்பால் பீச்வீதியில் சுங்கப்பாதைமேலிருக்கும் புகையிரதக் கடவை.

(2) யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலிருந்து 1 மைல் 12 சங்கிலிக்கப்பால் சுங்கக்குதத்திற்கும், வனப்பகுதிச் சாலைக்குமுள்ள சுங்கப்பாதைமேலிருக்கும் புகையிரதக்கடவை.

இக்கடவைகள் 1955-ம் ஆண்டு மே மாதம் 28-ந்திகதிமாலை 10 மணிதொடக்கம் மறுநாட்காலை (29-5-55) 6 மணிவரைக்கும் போக்குவரத்து வாகனங்களுக்கு முழுமையாக மூடப்பட்டிருக்கும்.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 27-ந் திகதி வெள்ளிவாரம் பி. ப. 5 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும். ஆனிமாதத்தில் பரிபூரண பலன்கள் அடையக்கூடியநாட்கள் பின்வருமாறு:— 1, 2, 3, 5, 9, 13, 17, 20 (2), 24, 29. பொதுப்பாவமன்னிப்பு அடையக்கூடியநாட்கள்:— 17, 29.

A. S. Francis of Mary
for Director

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணு சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

கிறீஸ்துநாதர் எங்கள் அரசர். எங்கள் அன்பும், பிரமாணிக்கமும் அவருக்கு உரிமை. கன்னிமரியம்மாள் எங்கள் அரசி. எந்தச் சிருட்டிக்கும் எட்டாத மகிமையை அவ அடைந்ததினுலே —தேவதாயாக அவ தெரியப்பட்டதினுலே— சம்மனசுகள்கூட அவவைச் சங்கைசெய்கின்றன. அவவுடைய அமல உற்பவம் மகிமை நிறைந்தது. கன்னிமை குன்ருத தேவஅன்னை ஆனதும் அந்த மகிமைக்கு இன்னும் அழகு கொடுக்கின்றது.

இவ்வரங்களால் எங்கள் எளிமைத் தனத்துக்கு எட்டாதவவாய் இருந்தாலும் திருமீட்பரின் மாதா ஆனதினுலே, இரட்சணிய வரங்களை அடைவோருடைய மாதாவும் ஆகினு. யேசு அவவுடைய திருக்குமாரன். எங்கள் சகோதரன். நாமும் அவவுடைய பிள்ளைகள். ஆகையால், அவசர வேளையில் அவவுடைய உதவியை நாம் அண்டிப்போகலாம்.

எங்கள் அரசிக்கு நாம் காட்டும் பக்தியானது சொல்லிலும், உணர்ச்சியிலும் மாத்திரம் இருப்பது போதாது. உணர்ச்சி நிலையற்றது. சித்தம் உறுதியுள்ளது. நடைமுறையில் அதன் விளைவை அறியமுடியும்.

நாம் காலையிற் செய்யும் காணிக்கையினுல் எங்கள் செபம், வேலை, துன்பம், பரித்தியாகம் யாவற்றையும் மரியாயின் அதிபரிசுத்த இருதயத்தின்மூலமாய் யேசுவின் திருஇருதயத்தின் சேவைக்குக் கையளிக்கிறேம். அதனுல் எங்கள் கிருத்தியங்கள் ஒவ்வொன்றும் பக்திக்கிருத்தியங்களாகின்றன. ஆகையால், இவைகள் ஒவ்வொன்றையும் நன்றே செய்யவேண்டும். ஏதுக்காக நன்ருய்ச் செய்யவேண்டும்? பூலோக சங்மானத்துக் காகவல்ல, ஆனுல், யேசுக்கிறீஸ்து நாதரினதும், எங்கள் அரசியினதும் நித்திய செயத்துக்காகவே. சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணு.

அரசியான தேவதாயாரின் திருநாள் இம்மாதம் 31-ந் திகதியன்று முதல்முறையாகத் திருச்சபையிலே கொண்டாடப்படும். இத்திருநாளின்போது சொல்லத்தகும் செபம்ஒன்றைப் பரிசுத்த பிதா ஆக்கியிருக்கிருர். அதை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

## பாலர்எமைக் காத்தருளாய்!

"ஜெயம்"

தவம்பெற்ருர் தவமுனியே!
தபத்திற்கோர் இல்லிடமே!
பவமற்ருள் மாமரியின்
பர்த்தாவே! காவலனே!
நவமுற்ருய்! பூங்கரனே!
நன்மரணப் பெட்டகமே!
சுபமுற்ருள் பாக்கியனே!
சொர்ணபதம் போற்றுகிறேம்

* * *

திருக்குடும்பத் தின்னுயிரே!
தேவசுதன் தாதையரே!
வரத்தினுரு வானவனே!
வாதனைக்கோர் தேற்றரவே!
விரத்தர்கள்தம் மாதிரியே!
வேந்தனுயர் புத்திரனே!
திருக்குடும்பக் காவலனே!
தேமலர்த்தாள் போற்றுகிறேம்

* * *

ஆதுலர்க்கார் ஆதரவே!
அருள்பொழியும் கார்முகிலே!
நீதியொளி கால்மதியே!
நேர்மையுறை நிர்மலனே!
சோதிநிறை வானவனே!
சொல்லிலடங் காதவனே!
பாதவிணை போற்றுகிறேம்
பாலரெமைக் காத்தருளாய்!

## கண்டு பிடியுங்கள்

1. காலுண்டு, கையில்லை. இடுப்புண்டு, வயிறில்லை. ஆனுல், யான் ஓர்பிரதான பாதுகாவலன். நான்யார்?
2. பின்வரும் வசனங்களிலிருந்து முறையே இவ்விரண்டு எழுத்துக்களாக எடுத்து முறைப்படுத்தினுல் உலகிலுள்ள இருமுக்கிய பொருட்களின் பெயர்களாகும். அவையாவை? கபடம், கல்யாணம், விருப்பம்.
3. ஒருஎழுத்து அடுத்தடுத்து மூன்றுமுறை வந்து ஒருகருத்தைக் கொடுக்கின்றது. அதியாது?
4. தாயின் வயிற்றிலிருந்து காலில்லாமல் வாலொடுபிறந்து, வாலில்லாமல் காலொடு திரியும் பிராணி என்ன?

ஜே. ஸ்டனிஸ்லாவுஸ் குறேரா
நீர்கொழும்பு.

* * *

நீங்கள் ஒருதானத்தை நினையுங்கள். அந்தத்தானத்தை இரண்டால்பெருக்கி ஐந்தைக் கூட்டுங்கள். கூட்டிவந்த தொகையை ஐம்பதால்பெருக்கி உங்கள் வயதையும் கூட்டுங்கள். கூட்டிவந்த தொகையுடன் 365-ஐக்கூட்டி 615-ஐக் கழியுங்கள். வரும்தொகையைத் தொங்கலில் இருந்து பாருங்கள். உங்கள்வயதுவரும். வந்தவுடன் அதில் ஒரு முழுத்தரிப்பு(.)வையுங்கள். நீங்கள் நினைத்ததானம் பக்கத்தில்வரும்.

அ. அல்போன்ஸ் சிராய்வா,
மன்னுர்.

### துன்பம் வந்தால்

அர்ச். கமில்லுஸ் தெலில்லிஸ் என்பவருக்குப் பெருந்துன்பங்கள் வந்ததுண்டு. சகிக்க வெகுகடினமானதுன்பம்வந்ததும் அவர் கல்லறைத் தோட்டத்துக்குப் போவார். அவருடைய சபையைச்சேர்ந்த சந்நியாசிகள் அடக்கம்செய்யப்பட்டிருந்த இடத்துக்குப் போய் நின்று, "ஒருநாள் என் உடலும் இங்கு புதைக்கப்பட்டு அழுகி மண்ணேடு மண்ணுகும். அப்பொழுது என்நினைவுகள் எப்பேர்ப்பட்டவையாயிருக்கும்? இங்கு அடக்கம்செய்யப்பட்டிருப்பவர்கள் திரும்பவும் உயிர் பெறுவார்களானுல், தங்களை அர்ச்சிக்கும்படி என்னபாடுபடவும் தயாராயிருப்பார்கள். இன்னும் உயிரோடிருக்கும் நாளே, இந்தச்சிறுவைகளைக் கண்டு பயப்படுவேன் என்பாராம்.

## அறிவுச் சுடர்

❋ உலகில் முதன்முதலாக நெசவு செய்து மக்களால் உபயோகிக்கப்பட்ட புடவையாது?

உரோமப்புடவையே. அதனைத் தொடர்ந்து இரண்டாவதாகப் பருத்திப்புடவையும், மூன்ருவதாகப் பட்டுப் புடவையும், நான்காவதாகச் சணற் புடவையுமே உபயோகத்துக்கு வாலாயின.

❋ புதிய பாப்பானவரைக் கருதினுல்மார் மாத்திரமே தனியத்தெரிவு செய்யவேண்டியவர்கள்என்று விதித்த பாப்பானவர் யார்?

இரண்டாவது நிக்கலஸ்எனும் பாப்பானவரே. இவர் 1059-ம் ஆண்டு விடுத்த பேரான அதிகாரப்பத்திர மூலம் அவ்வாறு விதிக்கலாயினர்.

❋ மத்தியநூற்ருண்டுகளில் கருதினுல்மார் திருச்சங்கத்தில் இருந்து வந்த கருதினுல்மார்தொகை என்னவாயிருந்தது?

இருபது பேருக்குமேல் அபூர்வமாகவே இருந்தது. ஆனுல், இன்று அவர்கள் இருக்கவேண்டியதொகை 70.

❋ தமது உத்தானத்தின்பின் யேசுக்கிறீஸ்துநாதர் பலருக்கும் எத்தனைமுறை காட்சியளித்தாரென்று வேதபுத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது?

பத்துமுறையென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆயின் வேதபுத்தகத்தில் சொல்லப்படாவிடினும் திவ்வியகர்த்தர் முன்சொன்ன பத்துக்காட்சிகளைவிடத் தம்முடையதிருத்தாயாருக்கும் காட்சியளித்தாரெனப் பாரம்பரியம் கூறுகின்றது.

❋ பனையில்போன்று வேறெந்த மரங்களில் ஆண்மரம், பெண்மரம் உண்டு?

பேரீச்சமரங்களிலும், பப்பாமரங்களிலும் உண்டு. ஆண்பேரீஞ்சு காய்ப்பதில்லை, ஆண்பப்பாகாய்க்கும்.

❋ எந்தநாடு உலகத்தின் கூரை என்று அழைக்கப்படுகிறது?

இந்தியாவின் வடபாலுள்ள தீபேத்து நாடுதான். இது கடல்மட்டத்துக்கு மேல் 14,000 அடிஉயரத்தில் இருக்கிறது.

❋ ருஷியர்கள் எல்லோரும் கம்யூனிஸ்தர்களா?

இல்லை. சுமார் 20 கோடி ருஷியர்களில் கம்யூனிஸ்தகட்சி அங்கத்தவர்களாய்இருப்பவர் 65லட்சம்பேர் மாத்திரமே. பொதுவாக ருஷியர்களில் அதிகமானேர் உள்ளத்தில் கம்யூனிஸத்தைக் கொண்டுள்ளவர்கள் அல்ல. இவ்வாறு ருஷியாவிலே மூன்றுவாரகாலம் சுற்றுப்பிரயாணஞ் செய்து திரும்பிய பேரான அமெரிக்க அச்சுப் பிரசுர பதிப்பாளரான திரு. வில்லியம் ஹேர்ஸ்ற்அவர்கள் கூறுகின்ருர்.

❋ எப்போது, எங்கே, பருத்தி நூல்கொண்டு முதன்முதலாகப்புடவை நெசவு செய்யப்பட்டது?

இது எவருக்குமே தெரியமாட்டாது. ஆனுல், கிறீஸ்துநாதர் பிறப்பதற்கு ஏறக்குறைய ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே இந்தியாவில் பருத்திப்புடவை பாவனையில் இருந்துவந்ததென்பதற்கு அத்தாட்சியுண்டு. கலம்பஸ் அமெரிக்காவுக்குச் சென்றபோது அங்கும், மேற்கிந்தியதீவுகளிலும் வசித்திருந்தமக்கள் பருத்திப் புடவைகள் தரித்திருக்கக் காணப்பட்டார்கள்.

❋ ஒருருத்தல்கோதுமையில் எத்தனை கோதுமைத்தானியங்கள்உண்டு?

ஏறக்குறையப் 13,000 கோதுமைத் தானியங்கள் உண்டு.

❋ பூமியிலே எவ்வளவு தேசப் பரப்பில் கோதுமை பயிரிடப்படுகிறது?

பூமியில் பயிர்ச்செய்கை நடைபெறும் ஒவ்வோர் ஏழுஏக்கர்நிலத்துக்கும் ஒருஏக்கர்வீதம் கோதுமைபயிரிடப்படுகிறது. துருவநாடுமுதல் சமரேகைநாடுகள்வரை இதுபயிரிடப்படுகிறது. எகிப்தியர் மிகப்பழங்காலத்திலேயே கோதுமைபயிரிட்டார்கள்.

❋ அமெரிக்க ஐக்கியதேசத்திலும், கனடாவிலும் தற்போது எத்தனை கத்தோலிக்க ஆஸ்பத்திரிகள் இருந்து வருகின்றன?

1,501 கத்தோலிக்க ஆஸ்பத்திரிகள் இருந்துவருகின்றன. இவற்றிலே நாற்பது ஆஸ்பத்திரிகள் கடந்தநான்கு வருடங்களிலும் கட்டப்பட்டவைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நானா சங்கதிகள்

● அமெரிக்க ஐக்கியதேச தேசிய கத்தோலிக்க சேமாபிவிர்த்திச் சங்கத்தின் யுத்தகஷ்டநிவாரண சேவைப் பகுதியானது இரண்டாவது உலகயுத்தம் முடிந்தகாலமுதல் இதுவரை உலகில் கொடுங்கோலாட்சி நடைபெறுகின்ற நாடுகளிலிருந்து வெளியேறிய சுமார் இரண்டுலட்சம் அகதிகளுக்குச் சுதந்திரஉலகில் புதிய உறைவிடங்களும், தொழில்துறைகளும் உதவியிருக்கின்றனவென்று சர்வதேச கத்தோலிக்க குடியேற்றகம்மிஷன் அறிக்கையிட்டிருக்கிறது.

● சோவியற்அரசின் ஆதிக்கத்திலுள்ள லிதுவானியநாட்டில் இருந்துவருகின்ற 30 லட்சம்கத்தோலிக்கருக்கும் வருகாலக்குருமாரை அருளுவதற்கென்று அந்நாட்டில் 53 குருத்துவ மாணவர்களே இருந்துவருகின்றார்கள். வழமையிலே இருந்துவந்த 425 குருத்துவமாணவருக்குப்பதில் சமீபகாலத்துக்குமுன் 75 மாணவரே இருந்துவந்தனர். ஆனால், கம்யூனிஸ்தரோ 23 பேரைப் பட்டாளசேவைக்கு அழைத்து இத்தொகையையும் குறைத்து விட்டனர்.

● யப்பானிலே காமாக்குரா எனுமிடத்திலுள்ள கனடிய திருமீட்பர் சபைக் குருமார் சாதாரணகத்தோலிக்க மக்களுக்கென அங்கே ஞானவொடுக்க மடம்ஒன்று அமைக்கின்றனர். இந்தமடம் "ஹாராக்கிரிமலை" யின் சாரலிலே அமைக்கப்படுகின்றது. ஹாராக்கிரிமலை என்றநாமம் வரக்காரணம், இற்றைக்கு 700 வருடங்களுக்கு முன் அங்குநிகழ்ந்த யுத்தமொன்றில் தோல்வியுற்றகாரணமாக 800 போர்வீரர் அம்மலையினின்று குதித்துத் தற்கொலைசெய்துகொண்டமையே.

● பிறநாடுகளைச்சேர்ந்த கத்தோலிக்கரான ஸ்தானீகர்கள், பிரதிநிதிகளின் விசாரணைக்குரவராயிருந்து சமீபத்திலே சோவியற்அரசால் வெளியேற்றப்பட்ட வண. ஜோர்ஜெஸ் பிசோனெற்றி சுவாமியாரிடமாக வண. லூயிஸ் டியன் எனப்பெயரிய மோட்சாரோபணமாதா சபையைச்சேர்ந்த மற்றோர் அமெரிக்ககுருவானவர் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். 40 வயதுடையவரான இவர் ஆங்கில, பிரான்சியபாஷைகளை நன்குகற்றவர். இத்தாலிய, ருஷியபாஷைகளைச் சொற்பமாக அறிந்திருக்கின்றார்.

● காற்றானியநகரிலிருந்து சிசிலிதீவுத் தொழிலாளர்களால் மூன்று தோடைமரங்கள் ரோமாபுரிகொண்டு சென்று இம்மாதம் 1-ந்திகதியன்று வத்திக்கான்தோட்டங்களில் நாட்டப்பட்டிருக்கின்றன. அன்று இத்தாலிய கிறீஸ்துவதொழிலாளர்சங்கத்தின் பத்தாம்ஆண்டு நிறைவுவிழாக்கொண்டாட்டத்தினமாகும்.

● இந்தியாவிலே பிக்கானீர்இராச்சியத்திலுள்ள ஓர்கிராமத்திலே இறந்துபோன தனதுகணவனின் சடலத்துடன் 27 வயதுள்ள ஓர்இராசபுத்திரமாது உடன்கட்டையேறி உயிரை மாய்த்துக்கொண்டாளாம். மதச்சடங்குகளை எல்லாம் முடித்தபிறகு இந்தஇராசபுத்திரமாது தனதுகணவனின்சிதையில் குதித்துஉயிர்நீத்தாள். அதை மூந்நூறுகிராமவாசிகள் காட்சிபார்த்துநின்றார்களாம்.

● பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் கிறேசியாஸ்ஆண்டவர் தமதுகாரியதரிசியான வண. இக்னேஷஸ் லொபோ சுவாமியாருடன் இம்மாதம் 9-ந் திகதியன்று எஸ். எஸ். ஏசியாஎனும் கப்பல்மார்க்கமாக ரோமாபுரிக்குப் பயணமாயினர். அவர் இரண்டுமாதகாலம் இந்தியாவுக்கு வெளியே தங்கியிருப்பார். அவர் திரும்புகிறவரை அருடைய விக்கார் ஜெனறல்களில் ஒருவரான மகாவண. விவியன் டையர்சுவாமியார் அதிமேற்றிராசனத்தைப் பரிபாலித்துவருவார்.

## திடீர்ச்சாவினின்று தப்பலாம்!

—:—

அர்ச். எட்மன்ட் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையில் படித்துக்கொண்டிருக்கும்போது ஒருநாள் தன்னந்தனிமையாய்ச் செபிப்பதற்காகத் தமதுசிநேகிதர்களைவிட்டு ஓர் ஒதுக்கிடத்திற்குச் சென்றார். அங்கு ஒரு அழகியஇளைஞன் அவர்முன்வந்து, "எட்மன்ட், நீதான் என் உற்றநண்பன்" என்றான். இனந்தெரியாத அந்தவாலிபனைப்பார்த்து: "என் பெயர் உனக்கு எப்படித்தெரியும்? இதற்குமுன்னால் நான் உன்னைப் பார்த்ததே கிடையாதே" என்றார் எட்மன்ட். "என்னையா? உனக்குத்தெரியாதா எட்மன்ட்? பள்ளியில் உன்பக்கத்தில் இருக்கிறேன்; நீ எங்குசென்றாலும் நான்உன்னோடுதான் இருக்கிறேன்; என்நெற்றியைப் பார் — யாரென்று உனக்குத்தெரியும்" என்றான் அந்த இளஞ்செம்மல்.

எட்மன்ட் கண்களைஉயர்த்தி உற்றுநோக்கும்பொழுது, "Jesus Nazarenus Rex Judaeorum" ("யேசுநசரேன் யூதர்களின் இராசா") என்ற வார்த்தைகள் அவ்விளைஞன்நெற்றியில் பளிச்சிட்டன.

"எட்மன்ட்! இதுதான் என்னுடையபெயர் — உன் இரட்சணியத்திற்கு ஊன்றுகோல்—ஒவ்வொருஇரவிலும், காலையிலும் உன்நெற்றியில் வணக்கத்தோடு இதை வரைந்துகொள்—சடுதிமரணத்திலிருந்து காப்பாற்றப்படுவாய்" என்று கூறினார். அந்தஇளைஞன்உருவில் வந்தவர் யுவக்கிறீஸ்து. I N R I (யே. ந. யூ. இ.) என்ற அடையாளத்தை நெற்றியில் இரவிலும்காலையிலும் பக்தியுடன் வரைவது பலகத்தோலிக்கரின் நற்பழக்கம்.

## சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில் கூறுகின்றார்

பிரித்தானியதேச முன்னைநாள்பிரதமர் சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில் அவர்கள் தமதுதொகுதி வாக்காளர் மத்தியில் சென்றசனிக்கிழமை தேர்தல் பிரசார சொற்பொழிவொன்று நிகழ்த்தியபொழுது, "நான்கு தலைவர்கள்" மகாநாட்டைக் கூட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளைத் தாம்பெரிதும் வரவேற்பதாகத் தெரிவித்துக் கூறியதுவருமாறு: "இம் முயற்சியின்பலனாக உலகப் பரப்பிலிருந்து கெடுபிடியுத்த நெருக்கடி ஒழிந்து, நாடுகள் சமாதானமாக உடனிருந்து வாழ்தலுக்கேற்ற சூழ்நிலை பிறக்க இடமுண்டு. யுத்தாயுதங்களின் உற்பத்திப் பெருக்கும் ஓரளவேனும் குறைதற்கும் வழிபிறக்கும். நான்கு வல்லரசுகளின் அரசாங்க தலைவர்கள் கூடிப் பேசப்போகும்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதற்காக நான் முன்பு பெருமுயற்சி செய்துவந்திருக்கிறேன். ஆனால், இம்மகாநாடு 'நேற்றோ' ஸ்தாபனத்தைப்போன்று உலக சுதந்திர நாடுகளுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்துமஎன்று நான் கருதவேயில்லை. இப்பொழுது 'நேற்றோ' வில் மேற்குஜேர்மனியும சேர்ந்திருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது. நான்கு வல்லரசுகளின் மகாநாடு எமதுஅபிலாஷைகள் அனைத்தையும் பூர்த்திசெய்யும்என்று எவருங்கூறமுடியாது. ஆனால், உலகசுதந்திரநாடுகள் பலம் பெற்று, ஒற்றுமைபூண்டிருக்குமாயின் அதிக நன்மையேற்பட இடமுண்டு.

"இன்று சோவியற்ருஷியாவும், அதன் கூட்டாளிநாடுகளும் பலம் பொருந்திய நவீனஇராணுவங்களைத் திரட்டிவைத்திருக்கின்றன. ருஷிய போர்வீரர் ஒருவனுடைய உயிரேனும் பலியாகாது ஐரோப்பாவில் அரைவாசியும், சீனா முழுவதும் கம்யூனிஸ்த ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப் பட்டிருக்கின்றன.

"இரண்டாவது மகாயுத்தம் முடிந்தபின்பும் நமதுநேசநாடுகளைப்போன்று கம்யூனிஸ்தர்கள் யுத்தநடவடிக்கைகளைக் கைவிட்டுச் சமாதானகருமங்களில் இறங்கவில்லை. ஆதலால், அவர்கள் நம்மைக் காட்டிலும் இராணுவபலம் பெற்றுவிட்டனர். அவர்கள் ஆக்கிரமிப்பில் இறங்கினால் ஐரோப்பா முழுவதையும் கைப்பற்றிவிடமுடியும். ஆனால், அவர்களைத் தடுத்துநிறுத்தியிருப்பது அமெரிக்காவின் பலமேதான். அமெரிக்காவும் கம்யூனிஸ்தர்களைப்போன்று அணுக்சக்தி ஆயுதஉற்பத்தியில் மேம்பட்டிருப்பதினால்தான் நாம் சுதந்திரமாக வாழ்கிறோம்."

## இத்தாலியும் கம்யூனிஸமும்

கம்யூனிஸ்தஆதிக்கத்தில் இருந்துவரும் இத்தாலிய சுரங்கத்தொழிலாளிகள்சமஷ்டியின் செயலாளராயிருந்த திரு. அந்தோனியோ அர்மீனோ அவர்கள் அப்பதவியை இராசிநாமாச் செய்துவிட்டுக் கம்யூனிஸ்தரல்லாத சுரங்கத்தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்துகொண்டார். இவர் தொழிலாளர்களிடையே அதிக செல்வாக்குடையவர். இவர் இத்தாலிய கம்யூனிஸ்தகட்சியிலிருந்து விலகியது அக்கட்சிக்குப் பெரும் நஷ்டம்என்று சொல்லப்படுகிறது.

பெறுசாநகரை யடுத்துள்ள காம்புலாகாஎன்ற ஊரில்உள்ள முனிசிப்பல் ஆஸ்பத்திரியின் தலைவராகிய டக்றர் மார்வெல்லியும் கம்யூனிஸ்தகட்சியிலிருந்து இராசிநாமாச்செய்துவிட்டார்.

தெற்குஇத்தாலியில்மட்டும் கடந்த சிலமாதங்களில் 200 பேருக்குமேல் கம்யூனிஸ்தகட்சியை விட்டுப்பிரிந்து கிறீஸ்துவ ஜனநாயககட்சியில் சேர்ந்துகொண்டனர். இவர்கள் தாங்கள் ஏன் கம்யூனிஸ்தகட்சியைவிட்டுப் பிரிகின்றனர்என்பதை விளக்கிக் கடிதங்கள் எழுதியுள்ளனர். அவற்றுள் இரண்டைமட்டும் ஈண்டு பெயர்த்தெழுதுகிறோம். சி. பத்திஸ்தா, ஜி. பத்திஸ்தா என்ற இருசகோதரர்கள் எழுதியுள்ளதாவது:

"பொதுமக்களின் அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களை மிலேச்சத்தனத்தில் ஆழ்த்திவரும் கம்யூனிஸ்தகட்சிக்குஎதிராகக் கிறீஸ்துவஜனநாயககட்சியைப் பலப்படுத்த உழைப்பதுஎன்று தீர்மானித்துவிட்டோம். அவர்களுடைய பொய்களையும், பித்தலாட்டத்தையும் நாங்கள் தொடக்கத்திலேயே கண்டுபிடியாமல் இருந்ததுபற்றி வருந்துகிறோம். நம்மைச்சுற்றியுள்ள மனிதர்கள்மீது துவேஷம்மூட்டுவதே அக்கட்சியின் அடிப்படையான அலுவலாக இருந்துவருகிறது. நாட்டுமக்களுடையவும், மனிதவர்க்கத்தினுடையவும் துரோகிகளாகியஇவர்கள் அவர்களைக் காப்பாற்ற விரும்புகிறவர்களைப்போல நடிக்கின்றனர். தொழிலாளர்களை உண்மையாகவே காட்டிக்கொடுப்பவர்கள் கம்யூனிஸ்தர்களேஎன்பதை நாங்கள் இப்பொழுது கண்டுபிடித்துவிட்டோம்."

காப்புவா வெத்தெரெஎன்ற நகரில் கம்யூனிஸ்த இளைஞர் சமஷ்டியின் தலைவராக இருந்துவந்த எலியோ போஸ்ஸோ எழுதுவதாவது: "கம்யூனிஸ்தகட்சியில் சகோதரத்துவ இலட்சியங்களையும், ஒற்றுமைஉணர்ச்சியையும் காணலாமென்று நம்பியிருந்தேன். ஆனால் நீண்டகாலம் அவர்களுடனிருந்துபார்த்ததில் அக்கட்சியில் சகோதரவுணர்ச்சியோ, ஒற்றுமை உணர்ச்சியோ கடுகளவுங்கிடையாது என்பதைக் கண்டேன்."

---

## மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

### திவ்வியயேசுவின் பாரியசுரூபம்

மட்டக்களப்புச் சிற்பக்கலை நிபுணரும், தாண்டவன்வெளி, பரிசுத்தவியாகுலமாதாகோயில் உபதேசியாருமாகிய திரு. ஜே. ஐயாத்துரைஅவர்களால் உருவாக்கப்பட்ட யேசுவின் திருச்சுரூபம்ஒன்று தாண்டவன்வெளிக் கோயில்வளவில் பங்குக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களால் சமீபத்தில் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப் படலாயிற்று. இது 600 ருத்தல்நிறையும், 6 அடிஉயரமும் உள்ளதாகும்.

### நாடக அரங்கேற்றம்

தாண்டவன்வெளி, பரிசுத்த வியாகுலமாதா பத்திச்சபைச் சிறுமிகளால் "யாமினி" அல்லது "கற்பின்மகிமை" என்னும் ஓர் கத்தோலிக்கநாடகம் அர்ச். மிக்கேல் கல்லூரிமண்டபத்திலே அரங்கேற்றப்பட்டுள்ளது. நவீனமுறையில் பாடப்பட்ட இந்த நாடகத்தின் இசையமைப்பும், நடிப்புகளும் பலராலும் பாராட்டப்பட்டன. இன்னும் இந்தநாடகத்தை இரண்டாம்முறையும் நடத்தும்படி பெரியோர்களிடமிருந்து வேண்டுகோள்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. தாண்டவன்வெளியில் லூர்துகெபி ஒன்று கட்டிஎழுப்ப நிதிசேர்க்கும் நோக்கமாகவே இந்தநாடகம் நடத்தப்பட்டது.

### திரிகோணமலை மேற்றிராணியார்

மகாவந். எம்மேற்றிராணியாண்டவரவர்கள் அமெரிக்க ஐக்கியதேசத்துக்கும், ரோமாபுரிக்கும் விஜயஞ்செய்துவிட்டுச் சென்ற 6-5-55 வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணியளவில் மட்டுநகர் வந்துசேர்ந்தார். கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்கள் மாலைசூட்ட, வாத்தியங்கள்இசைக்க, பங்குக்கிறீஸ்தவர்கள் அவரைவரவேற்று, ஆசாரமரியாதையுடன் புளியந்தீவுப் பரிசுத்ததேவதாயாரின் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே ஆண்டவரவர்கள் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளியதோடு வரவேற்புவிழா நிறைவாயிற்று.

— நிருபர்

---

● ஒவ்வோர் கிறீஸ்துவமிஷனரியும் சமாதானவழியிலே இந்தியாவில் தனதுவேலையைச்செய்யும் உரிமையைக் கொண்டிருக்கிறார்; பாராளுமன்ற அங்கத்தவர்கள்சிலர் மிஷனரிமாரின்வேலைகளை விரும்புவதில்லை; கிறீஸ்துசமயம் இந்தியாவில் அதிகம் புராதனமான ஓர்சமயமென்பதையும், அதுநிலைத்திருக்கும்படியாய் அதற்கு வேண்டிய சந்தர்ப்பமெல்லாம் அருளப்பட வேண்டுமென்பதையும் அவர்கள் மறந்துபோகிறார்கள்என்று புதியடில்லியிலே பாராளுமன்றத்தில்நடைபெற்ற ஓர்விவாதத்தின்போது இந்தியபிரதமர் நேருஅவர்கள் கூறியிருக்கின்றார்.

● பம்பாய்நகர் அதிமேற்றிராசன விக்கார்ஜெனறல்களில் ஒருவரும், தற்போதுஅங்குள்ள சந்தாக்குரூஸ் ஆலய விக்காராய் இருந்துவருகிறவருமான மகாவண. லொஞ்ஜினஸ் கபிரியேல் பெறேய்ரா சுவாமியவர்கள் பம்பாய் அதிமேற்றிராணியாரான கருதினல் வலேரியன் கிறேசியாஸ்ஆண்டவருக்குத் துணைமேற்றிராணியாராக நியமனஞ் செய்யப்பெற்றிருப்பதாய் ரோமாபுரியிலிருந்து சமாச்சாரம்கிட்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NOTICE.

Jaffna,
Catholic Club,
11th May, 1955.

An Executive Committee meeting of the Jaffna Diocesan Union will be held on Sunday the 22nd May, 1955 at 5 p.m. All members are kindly requested to be present.

AGENDA.

1. Consideration of the proposed Amendment to Rules of the Jaffna Diocesan Provident Society Ltd.
2. Consideration of a letter received from some members seeking for an Establishment of a Provident Society for women.
3. Any other business.

Yours faithfully,
**A. Lazarus,**
Hony. Secretary.

## FOR SALE

A 4 Octave Harmonium in good condition seen at

LANKA MUSICAL WORKS,
Main Street,
JAFFNA.

Price Rs. 150/-

## வசந்தாவின் சோகக்கதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டையடைந்தேன். "இதோ திருடன் பெண்ணுட்டி குழந்தையுடன் வருகிருள்" என்று என்தெருவிலுள்ள அத்தனைபேரும் என்னை வாழ்த்தி வரவேற்ருர்கள். விஷயம் விளங்காத நான் திருகவிழித்தேன். கடைசியாக எங்கள் குடிசையைச் சோதனைபோடவந்த பொலிஸ் இன்ஸ்பெக்றரிடமிருந்து எல்லாவிஷயங்களையும் அறிந்தேன்.

என்மேல் அனுதாபம்கொண்ட அவர் கடைசியாய்ச்சொன்னுர். "குணசீலன்என்னும் உன்கணவர் தனது ஊரில் ஓர் பெரிய ஆசிரியராயிருந்த சோமசேகரம் என்பவரின் முதல்மகன். அவருக்குத் தாயும், ஓர்தம்பியும்இருக்கிருர்கள். சுமார் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமுன் அவர் அரசாங்க பரீட்சையில் தவறிவிட்டார். தகப்பனுர் கோபித்துக்கொண்டார். அதனுல், தனதுதாயின் கழுத்துச்சங்கிலியைத் திருடிக்கொண்டு அன்று வெளியேறியவர் திரும்பவும் வீட்டிற்கே திரும்பவில்லை. உண்மையில் அவர் எங்குமே கண்ணியமாய் வேலை பார்க்கவில்லை. திருடர்கோஷ்டியுடன் சேர்ந்து திருடி அகப்பட்டு ஆறுவருடக் கடினகாவற் தண்டனை விதிக்கப்பட்டார்" என்ருர்.

இரண்டு வருடங்கள் கழிந்தன. மூன்று மாதங்களுக்குமுன் இவனுடைய அப்பா சிறையில் நோய்வாய்ப்பட்டுவிடவே அவரைச் சொந்தஊருக்குப் பெற்ருேரிடம் அனுப்பிவைத்திருப்பதாக விஷயம்தெரியவந்தது. உடனே புறப்படமுயன்றேன். டிக்கெற்வாங்க முதலாய் எங்களிடம் பணமில்லை. இவன் அப்பாவினுல் ஏற்பட்டகளங்கத்தால் எங்களைநம்பி யாரும்கடன் கொடுக்க இசையவில்லை. கஷ்டசீவனம்செய்து ஒருவாறு என் தாய் என்னை நேற்று யாழ்ப்பாணறெயினில் ஏற்றிவிட்டாள் என்று வசந்தா கதையை முடித்தாள். ஈற்றிலே இருவரும் ஓர் வீட்டை யடைந்தார்கள். சைக்கிளை வாசலில் நிறுத்திய ஜெயசீலன் "அம்மா, அண்ணியும், குழந்தையும் வந்துவிட்டார்கள்" என்று கூப்பிட்டான். எதிர்வீட்டுப்பெண் ஒருத்திக்கு ஏதோ கொடுக்க வாசலுக்குவந்த அவன் தாய் வசந்தாவையும் இராஜுவையும் பார்த்தாள். நீர்மல்கிய கண்களுடன் தன்மகனையே அச்சுவடித்ததுபோல் இருந்த தன்பேரனைக் கைகளில் வாங்கினுள். "உன்அப்பா இறந்துபோய் மூன்றுமாதமாய் விட்டதடாகண்ணு" என்று கதறினுள். சோகமேஉருவான வசந்தா பிரமித்து நின்ருள்மரம்போல்.

[யாவுங் கற்பனையே]

## திருப்பலி

### மூன்று ஞாபகங்கள்

உங்களுடைய கண்ணுக்குள் ஒரு தூசு விழுந்து விட்டால் உடனே கண்ணைக் கசக்குவீர்கள். உங்கள் சரீரத்தின் அம்சமாகிய கை துன்பப்படும் கண்ணுக்கு உதவுகிறது. முழுச் சரீரத்திலும் அப்படியே. ஒரு அவயவம் மற்றதற்கு உதவி புரிகிறது.

திருப்பலியைப் பற்றி முன் ஒருமுறை கூறியபொழுது, சகலமனிதரும் ஒரு குடும்பத்துக்குச் சேர்ந்தவர்கள் என்று சொன்னேன். யேசுவின் திருச்சபைக்குச் சேர்ந்தவர்களைப்பற்றி இப்படிக் கூறுவது முப்போதும் பொருந்தும். அவர்கள் எல்லாரும் ஒருசரீரம். யேசுக்கிறீஸ்துநாதர் இச்சரீரத்தின் சிரசு.

திருச்சபைக்குச் சேர்ந்த ஒருவன் மரணித்த போதிலும், அவன் மோட்சத்திற்குப் போனுலுஞ்சரி, உத்தரிப்புஸ்தலத்துக்குப் போனுலுஞ்சரி, அவன் திருச்சபைக்குச் சேர்ந்தவன். திருச்சபைக்குச் சேர்ந்த எல்லா உறுப்பினரும் ஒருவருக்கு ஒருவர் உதவியாய் இருக்கிருர்கள்

"சாங்துஸ்" மணி அடித்தபின் பூசையிற் சொல்லப்படுஞ் செபங்களில் "ஞாபக" செபங்கள்மூன்று. முதற் செபத்தில் பூலோகத்திலிருக்கும் முழுத் திருச்சபைக்காகவும், விசேஷமாய்ப் பரிசுத்த பிதாவுக்காகவும், எங்கள் மேற்றிராணியாருக்காகவும் செபிக்கிருேம். எங்கள் செபத்தில் உலகம் முழுவதிலுமுள்ள சகல கத்தோலிக்கருக்காகவும் நாம் மன்ருடுகிருேம். உலகத்தில் ஒவ்வொரு தேசத்திலும் இலட்சாதி இலட்சம் கத்தோலிக்க மக்கள் சீவிக்கின்றனர். அவர்களில் அநேகர் துன்பப்படுகிருர்கள். நாங்கள் சாப்பிடுகிற அளவு அவர்களுக்குக் கிடைப்பதில்லை. எங்களுடைய வீடு வாசல்கள்போல அவர்களிடம் இல்லை. எங்களைப் போலச் சுதந்திரமாய் அவர்கள் கோயிலுக்குப் போய்வர முடியாது. துன்பப் படுகிறவர்களுக்காக விசேஷமாய்ச் செபிப்போம்.

இரண்டாவது "ஞாபக" செபத்திலே பூசையில் வேண்டிக்கொள்ள விரும்பும் சிலருடைய பெயர்களை நாம் கூறுகிருேம். எங்கள் பெற்ருேர், சகோதரர், சிநேகிதருக்காக மன்ருடுவோம். பூசைக்குச் சமூகமா யிருக்கிறவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும் மன்ருடவேண்டும்.

இறுதியில் மூன்ருவது ஞாபக செபத்தில் மோட்சவாசிகளை நினைவு கூருகிருேம். எங்களுடைய செபம் அவர்களுக்குத் தேவையில்லை. அவர்களுடைய செபமே எங்களுக்குத் தேவை. ஆனுல், அவர்களைச் சங்கை செய்கிறதற்காக நாங்கள் அவர்களை நினைத்து மன்ருடுகிருேம்.

அவர்களிலே யேசுவுடையவும், எங்களுடையவும் தாயாரான மரியம்மாள்முதல். அவ மோட்ச இராக்கினி. நாம் அவவை நேசிக்கிருேம். சங்கை செய்கிருேம். அதற்குப்பதிலாக அவ எங்களை நேசிக்கிரு. எங்களுக்கு வேண்டிய உபகார ஆசீர்வாதங்களைக் கேட்கிரு. அவவுடைய செபம் திருக்குமாரனிடம் வல்லமை பொருந்தியது.

அதன்பின் ஆண்டவருடைய முதல் குருக்கள், மேற்றிராணிமாரா யிருந்த சீஷர்களைச் சங்கிக்கிருேம். அவர்கள் உலகத்தில் இருந்தபோது சனங்களை நேசித்து, அவர்களுடைய ஆத்தும ஈடேற்றத்துக்காக உழைத்தார்கள். நாம் மோட்சமடைய வேண்டியது எப்படியென்று அவர்களுக்குத் தெரியும். அவர்கள் சருவேசுரனுடைய சிநேகிதராய் இருக்கிறபடியால் தேவசந்நிதானத்தில் அவர்களுடைய செபம் வல்லபமுள்ளது.

நீங்கள் உங்களுடைய பாதுகாவல் அர்ச்சியசிட்டரை நினைவுகூரலாம். அவர் யோசேப்பு, மேரி, பிரான்சீஸ் அல்லது பிலோமினுவாய் இருக்கலாம். யாராயிருந்தாலும் நீங்கள் எப்போதும் அவரைப் பின்பற்றுவதற்கு உதவிசெய்யும்படி கேளுங்கள். அப்பொழுது நீங்களும அவ்வர்ச்சியசிட்டருடன் ஒருநாள் மோட்சத்தில் வாழலாம்.

## தண்ணீர்

நமக்கு ஆகாரம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் தண்ணீர். நம்முடையதிரேகம் தினமும் 5 அல்லது 6 பைந்துநீரை வெளியாக்குகிறது. இதற்குச்சரியாக நாமும் தண்ணீர் பருகவேண்டும். திரேகத்திலிருக்கும் அசுத்தங்களைத் தோல், குண்டிக்காய், சுவாசப்பை, குடல்முதலியஉறுப்புகள் தண்ணீர்மூலமாக வெளியாக்குகின்றன. இவ்வுறுப்புகள் தங்களுடைய வேலைகளைச் சரிவரச்செய்து திரேகத்தைஆரோக்கியமாய் வைத்துக் கொள்ள வேண்டுமென்ருல், திரேகத்திற்குத் தண்ணீர் மிகவும்அவசியமானது. வயதுமுதிர்ந்தவர்களும், குழந்தைகளும ஒருநாளில் தங்கள் திரேகத்திற்கு வேண்டிய தண்ணீரைக் குடிக்கிருர்கள். நாம் சாதாரணமாக ஆகாரத்தின்ஒருபாகமாகத் தண்ணீரைச் சேர்த்துக்கொள்ளுகிருேம். அப்படிச்செய்வது மிகவும் கெடுதியாகும். நாம் ஆகாரம் சாப்பிடும்போது தண்ணீர்குடித்தால் நம்முடைய உமிழ்நீர், இரைப்பையில்உண்டாகும் நீர்முதலியவைகள் அதிகதண்ணீராகி, ஆகாரத்தைச் சீரணிக்கச்செய்யும் சக்தியை இழந்துவிடுகின்றன. அநேக வியாதிகள் — முக்கியமாய்ச் சீரணசம்பந்தமான வியாதிகள், நரம்புவியாதிகள் இவ்விதம் ஆகாரத்துடன் தண்ணீர் அருந்துவதினுல் உண்டாகின்றன. நாம் காலையில்எழுந்து பல்விளக்கியவுடன் ஒருகிளாஸ்தண்ணீர் குடிப்பது ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. இப்படிச்செய்வதினுல் அநேகவியாதிகளுக்குக் காரணமான மலச்சிக்கலைத் தடுத்துக்கொள்ளுகிருேம்.

ஆகாரத்திற்கு ஒருமணிநேரத்துக்கு முன் தண்ணீர் அருந்தவேண்டும். ஆகாரம்சாப்பிட்டவுன் வயிறு நிறையத் தண்ணீர் அருந்துவதைவிடக் கொஞ்சம் தண்ணீர் அருந்திவிட்டுப் பிறகு அரைமணிநேரம்கழித்து ஒரு கிளாஸ் தண்ணீர் அருந்தவேண்டும். நாம்குடிக்கும்தண்ணீர் அதிக சூடாயாவது, குளிர்ச்சியாயாவது இருக்கக் கூடாது. அப்படிக் குடிக்கநேரிடின் கொஞ்சநேரம் வாயில்வைத்திருந்து விழுங்கவேண்டும். அதிகம் சூடான தண்ணீரை அருந்துவதினுல் அது இரைப்பையைக் கெடுப்பதுடன் இரத்தத்தையும் சுண்டச்செய்கிறது. தண்ணீர் திரேகத்திற்கு மிகவும்நயமான பானம். ஈரல்வியாதி, அசீரணம், பசியின்மைமுதலிய வியாதியுள்ளவர்கள் நன்ருகப் பசிஎடுக்குமட்டும் கொஞ்சம் தண்ணீரைக் கொஞ்சம்கொஞ்சமாக உறிஞ்சிக்கொண்டிருப்பது மிகவும்நல்லது. நமது ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமான காற்ருகிய பிராணவாயுவுக்குத் தண்ணீரே ஊற்றுஎன்று கண்டுபிடித்திருக்கிருர்கள். நமக்குத் தாகம் எடுப்பது, நமதுஇரத்தத்திலுள்ள ஈரம் குறைவுபடுகிறதென்பதைக் காண்பிக்கின்றது. தாகம்எடுக்கும்போது தண்ணீர் அருந்தவேண்டும்.

நாம்குடிக்கும் தண்ணீரை நன்ருகக்காய்ச்சி மூடினபாத்திரத்தில் குளிரவைத்துக் குடிக்கவேண்டும். அநேக தொற்றுவியாதிகளுக்குத் தண்ணீரே முதற்காரணம். தண்ணீரைக்காய்ச்சுவதினுல் இத்தொற்றுவியாதிகளுக்குக் காரணமான விஷக்கிருமிகள் இறந்துபோகின்றன. நாம் தண்ணீர்குடிப்பதற்குமுன் வாயைக் கொப்புளித்துவிட்டுக் குடிக்கவேண்டும். தண்ணீரே நீண்டஆயுளுக்கு முக்கியகாரணமாய் இருக்கிறது.

✳ உலகில் எங்கே மகாப்பெரிய பஸ்கள் தினமும் பிரயாணஞ்செய்கின்றன?

உலகின் மகாகொடிய வனுந்தரங்களில் ஒன்ருகிய சீரியவனுந்தரத்தினூடாகவே பிரயாணஞ்செய்கின்றன. "டெசேட் எக்ஸ்பிறெஸ்" என அறியப்படுகின்ற இவைகள் தமாஸ்குஸ்-பாக்டாட்என்னும் இருநகரங்களுக்குமிடையிலுள்ள சுமார் 500 மைல்தூரத்தையும் 16 மணித்தியாலத்துக்குச் சற்றேகுறைந்தநேரத்தில் பிரயாணஞ்செய்து முடிக்கின்றன. இவைகள் 68 அடிநீளமும், 8 அடி 8 அங்குலஅகலமும், 11 அடிஉயரமுமுள்ளன. இவற்றிலே மலகூடமும், சமையல்அறை ஆதியனவும் இருக்கின்றன.

### அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சேன்ற் டி போல்
தருமசபை
யாழ்ப்பாணம்



### கேட்டநன்மைகள் அனுகூலமானதினுல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

கல்லில்லா: எம். ஜே. பெருேரு 1-00, எம். சண்முகம் 2-00, பிலிப் அன்ரனி 2-00 — டிம்போடிரு: எம். எவ். சூசைப்பிள்ளை 1-00 — வட்டவளை: ரி. அன்ரனி குருஸ் 5-00 — பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 4-50—அரிப்பு: வி. குருசுமுத்து 2-00 — கற்பிட்டி: எஸ். பி. ரோயீஸ் 15-50 — வவுனியா: பி. எஸ். பஸ்ரியாம்பிள்ளை 4-00 — மலாயா: எம். மரியாம்பிள்ளை 18-00, எஸ். யோசேப்பு 13-25 —மண்டைதீவு: எஸ். இராயப்பு 2-00— கொழும்பு: கே. அந்திரேயாஸ் 6-00 — சில்லாலை: எம். ஜே. மரியநாயகம் 2-00 — பூக்குளம்: டி. டி. யோசேப் 3-00 — உடப்புவா: பி. பேதுரு பெர்னுண்டோ 2-00 — இற்ருலை: பிருங்அன்ரன் 8-00, ஏ. ஈ. லீயோ 10-00 — முருங்கன்: எம். சில்வேஸ்திரி டி மெல் 8-00—டின்னியா: எம். ஜி. தோமஸ்பிள்ளை 5-00—கம்பளை: மிசெஸ் சேவியர் 4-00 — டிக்கோயா: எம். பஸ்ரியாம்பிள்ளை 2-00 — முள்ளிக்குளம்: ஏ. பி. இன்னுசியா கூஞ்ஞு 2-00 —கல்கமுவா: ஏ. பாவிலுப்பிள்ளை 1-50, வி. சந்தியாப்பிள்ளை 2-00, ரி. ஜேட்ருட் அம்மா 2-00, ரி. பிரான்சீஸ்கா 1-00 — அக்கரபற்றன: சி. எம். தாஸ் 15-00, எல். ஏ. எஸ். தோமஸ் 1-00 — நாவற்காடு: ரி. யோண் 1-00 — அப்புத்தளை: ஆர். ஆரோக்கியம் 2-00 — பாஷையூர்: சேயோன் திரேசா 1-00 — கலகா: ஆர். ஆர். தோமஸ் 2-00 — வெலிமடை: ஓர் உபகாரி 10-00 — பருத்தித்துறை: இராயப்பு தோமஸ் 5-00 — முள்ளிக்குளம்: எஸ். பிரகாசியம்மா 4-29, கே. வலத்திசார் கூஞ்ஞு 1-00, மிசெஸ் பிரான்சீஸ்வாஸ் 2-00 — வின்டுலா: பி. போல் 3-00 — பரந்தன்: ரி. மரியாம்பிள்ளை 1-00 — கரவெட்டி: எஸ். பஸ்ரியாம்பிள்ளை 1-00, பி. கபிரிகேற்பிள்ளை 1-00 — நுவரேலியா: எல். ரி. எஸ். பஸ்ரியன் 1-00 — செட்டிகுளம்: ஜே. இராயப்பு 5-00 — முருங்கன்: டி. டி. கபிரிகேல் 4-50 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00, மிசெஸ் என். இராசம்மா 15-00—யாழ்ப்பாணம்: ஏ. கே. சின்னையா 10-00, ஜே. யோசேப்பு 10-00, எல். எஸ். 2-00 — கற்றன்: எம். அந்தோனிப்பிள்ளை 2-00 — கட்டைக்காடு: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 2-00 — கொழும்பு: மிசெஸ். ஏ. அந்தோனிப்பிள்ளை 2-00—றக்குவானை: எஸ். டானியல் 2-00 — அக்கரபற்றன: எச். ஆர். சில்வானுஸ் 3-00 — மஸ்கேலியா: பி. கபிரிகேல் 1-00.

| | |
|---|---|
| **The Director,<br>St. Joseph's Conference.<br>Bishop's House,<br>JAFFNA.** | **சென் வின்சேன்ற் டி போல்சபைத்தலைவர்<br>மேற்றிராசன மாளிகை<br>யாழ்ப்பாணம்.** |

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 19-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org